Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture, & Village improvement. etc.,

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். **E. Suryanarayana Aiyar** B. A., B. L., *Editor*

புத்தகம் 1. | ரௌத்ரி௵ ஆவணி௴ ௰௳ புதன்கிழமை 25th August 1920. தஞ்சாவூர். | பிரதி 11.

ஸமரஸ போதினி.

சந்தா விவரம்:-

இந்தியா, பர்மா, சிலோன்
முதலிய விடங்களுக்கு ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ 3—0—0
பினுங்கு, சிங்கப்பூர், முத
லிய விடங்களுக்கு ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு .... ரூ 4—0—0
தனிப் பிரதி விலை .... ரூ 0—2—0

விளம்பர விகிதம்:-

பத்தி 1க்கு மாதம் 1க்கு ரூ 20—0—0
4 insertions per
month per column Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இறும்.

கோரனுஸ்ட்வ் நெ. 5. ரூ **14-0-0**.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatina Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager, **Young India**.
Ahmedabad.

நாணயமும் நயமுமான
இடம்
ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.
ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்
பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, மூந்தாணை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், டீக்கலர், காங்கு கலர்களில் ஒம்ரூல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜமக்காளங்கள்.

சர்க்யூட் ஜம்க்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவறக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

கோர்ட்டு விளம்பரங்கள்.

தஞ்சாவூர் சப்-கோர்ட்டு.

1920-ம் வருஷத்திய O. P. No. 33.

மைனர் மருதநாயகம் 1. } மனுதார்
மைனர் ஜானகிராமன் 1. } கள்.
ஷெயார்கள் தாயார் காவேரியம்மாள்–அடுத்த சிநேகிதி.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால்:—

தஞ்சாவூர் டவுன் கருந்தட்டாங்குடியில் ஸ்திரவாசமாயிருந்து இறந்துபோன கிருஷ்ணசாமி பிள்ளைக்கு வரவேண்டிய கடன் தொகையை வசூல் செய்ய மனுதார்களுக்கு வார்சு சர்டிபிகேட்டு கொடுக்கவேண்டுமென்று மனு கொடுக்கப்பட்டு ஷெ மனு கோட்டீஸக்கு உத்தரவாகி 10-9-1920-ல் ஈரங்கி கெடு குறிக்கப்பட்டிருப்பதால், அது விஷயமாய் ஆட்சேபனை செய்பவர்கள் ஷெ தேதியில் ஷெ கோர்ட்டில் ஆஜராகி ஆட்சேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளலாம்.

தஞ்சாவூர். } J. Kumarasami Pillay.
17—8—20. } Pleader for Petitioner.

தஞ்சாவூர் சப்-கோர்ட்டு.

O. P. No. 21/20.

இறந்த T. A. பஞ்சாபகேச பாகவதருக்கு வரவேண்டிய கடன் விஷயத்தில்,

துரையப்பய்யர். } மனுதார்.
சிவகாமு அம்மாள். } ரேஸ்பாண்டேண்ட்

கஸ்பா தஞ்சாவூரில் ஸ்திரவாசமாயிருந்து இறந்த T. A. பஞ்சாபகேச பாகவதருக்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்ய சர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்று ஷெயார் குமாரரான மனுதாரர் ஷெ நம்பரில் மனுக்கொடுத்து நாளது மீ 28-ந் தேதி ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் ஆட்சேபனையுள்ளவர்கள் ஷெ தேதியில் ஷெ கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம். மனுதார் அட்ரெஸ் ஷெயூர் மேலவீதி ஹைகோர்ட் வக்கீல்.

தஞ்சாவூர். } G. R. Kalyanasundaram Iyer.
16—8—20. } *Vakil.*

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்

திலகர் பிரானும் சூரத்து காங்கிரஸும்

4ந் தேதி ஸமரஸ போதினியின்
(11ம் பக்கத் தொடர்ச்சி.)

கல்கத்தாவில் கூடிய தேசீய சபையில மத்திய மாகாணங்களின் தலை நகராய் விளங்கும் நாகப்பூரில் மறு வருடம் காங்கிரஸை நடத்துவதாய்த் தீர்மானிக்கப்பட்டது. நாகப்பூரிலுள்ள ஜனங்கள் திலகர் பெருமானைத் தவிர வேறு யாவரும் அக்கிராசனம் வகிக்கலாகாதென்று ஒரு முகமாய்க் கூறிவிட்டார்கள். சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட யானைபோல, மிதவாதிகள் திலகர் பிரானின் பெயரைக்கேட்டு மருண்டார்கள். மிதவாதத் தலைவர் மேத்தா, திடீரென்று ஒரு சூழ்ச்சி செய்து காங்கிரஸ் சூரத்தில் கூடுமென விளம்பரம் விடுத்தனர். மகாநாடுகளைக் காட்டிலும் சூரத்தில் மிதவாதிகளுக்குச் செல்வாக்கதிகம். வயது முதிர்ந்த பெரியார் தாதாபாய் நாரோஜியின் தலைமையின் கீழ் நடந்தேறிய காங்கிரஸில் மிதவாதிகளெல்லோரும் யாதொரு வித்தியாசமுமின்றிச் சுதேசியம், பகிஷ்காரம, தேசியக் கல்வி, சுய ஆட்சித் தீர்மானங்களை ஒப்புக்கொண்டனரெனினும் அவர்கள் மனதில் அச்சம் குடிகொண்டிருந்தது. 1907-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சூரத்தில் கூடிய பம்பாய் மாகாண மகா நாட்டில் மேத்தாவின் சதியாலோசனையினால், சபை விளம்பரப் பத்திரத்தினின்றும் தேசியக்கல்வி, பகிஷ்காரம் இவைகளைக் குறித்த தீர்மானங்கள் நீக்கப்பட்டிருந்தன. இதனால் தேசீயவாதிகளுக்கு மிதவாதிகளின் மேல் பெருத்த சந்தேகமுண்டாயிற்று.

இஃதன்றியும், விசாரணையின்றிச் சிறையிலிடப்பட்டு அவ்வமயம் விடுதலையடைந்த லாலா லஜபதிராயைக் காங்கிரஸின் அக்கிராசனராயத் தெரிந்தெடுக்குமாறு தேசமெங்கும் கிளர்ச்சி யேற்பட்டிருந்தும், கோபால கிருஷ்ண கோகலேயின் தந்திரமான தூண்டுதலினால் சூரத்து வரவேற்புக் கமிட்டியார், ராஷ் பிஹாரி கோஸெனும் வங்காள மிதவாதியைத் தலைவராய் நியமித்தார்கள் இச்செய்கையைக் கண்டு அமிதவாதிகள் காங்கிரஸ் பழய நிலையினின்றும் பின்வாங்கப் போவதெனக் கருதி அதைவிலக்கும் பொருட்டு முயற்சிகள் செய்யலாயினர் மேலும் பிரதிநிதிகள் ஆலோசிக்க வேண்டிய விஷயங்களைத் தீர்மானங்களாய்த் தயாரிக்கவும் அக்கிராசனரை நியமிக்கவும்மற்றுமுள்ள வேலைகளைச் சரிவர கவனிக்கவும் வரவேற்பு கமிட்டியாரால் நவம்பர் மாதம் இருபத்து நான்காந் தேதியே கோபால கிருஷ்ண கோகலேக்கு அதிகாரம் வழங்கப்பட்டும், காங்கிரஸ் ஆரம்பிக்கும் வரையில் ஒரு பிரதிநிதியாவது தீர்மானங்களின்னவையென்று அறிந்து கொள்ள முடியவில்லை. காங்கிரஸ் கூடுவதற்குப் பத்து நாட்கள் முந்தி உபசரணைக் கமிட்டியார் தேசீய சபையில் விவாதிக்கப்படும் முக்கியமான விஷயங்களின் குறிப்பைப் பிரசுரஞ் செய்திருந்தார்கள். இந்தப் பிரசுரத்தில்சுய ஆட்சி, பகிஷ்காரம், தேசியக் கல்வி போன்ற தீர்மானங்களொன்றும் காணப்பட்டவில்லை. பம்பாய் மிதவாதிகளின் மனப்பான்மை இத்தகைய பிரசுரத்தினின்றும் நன்கு விளங்கியது.

திலகர் பெருமான் காங்கிரஸ் தொடங்குவதற்கு நான்கு தினங்கள் முன்னால், சூரத்திற்குச் சென்றார். சென்றவுடன் ஒரு பொதுக்கூட்டங் கூட்டித் தேசியக் கட்சியின் கொள்கைகளையும் முறைகளையும் எடுத்துரைத்தார். மிதவாதிகள் காங்கிரஸின் மகிமையைக் குறைப்பதற்குச் சூழ்ச்சிகள் செய்து வருகின்றனரென்றும், கல்கத்தா காங்கிரஸின் தீர்மானங்களை யொழிப்பதற்கு முயலுகிறார்களென்றும அதைத் தடுப்பதற்காக அமிதவாதிகள் நடத்தும்போரில் சூரத்து வாசிகள் உதவி புரிய வேண்டுமென்றும் மிகவும் உருக்கமாய்ப் பேசினார். தாம காங்கிரஸைக் குலைக்க [illegible]யென வும் அதனொளி மங்காது காக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியரின் கடமையென்றும் வற்புறுத்தினார். மறுநாள் அரவிந்தரின் தலைமையில் ஐந்நூறு தேசியப் பிரதிநிதிகள் கூடிக் காங்கரஸ பின் போவதாயிருந்தால் அமிதவாதிகள் நியாய முறை தவறாது அக்கிராசனரின் நியமன முதற்கொண்டு யாவற்றையும் எதிர்க்க வேண்டுமென முடிவு செய்தார்கள்.

டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் நாள், கோகலேயால் நிர்ணயிக்கப்பட்ட காங்கிரஸ் விதிகளடங்கிய அச்சுப் பிரதியொன்றைத் திலகர் பிரான் தற்செயலாய்ப் பார்த்தார். அந்த லிகிதத்தில் "ஆங்கில ஏகாதிபத்தியத்துள் இதர நாடுகள் அனுபவித்து வரும் சுய ஆட்சியைச் சிறிது சிறிதாய்ப் பெற முயலுவதே காங்கிரஸ் சபையின் இறுதியான நோக்கம்" என்று வரையப்பட்டிருந்தது. இதையறிந்த திலகர் அந்நாட் காலையில் தேசியப் பிரதிநிதிகளை யொருங்கு கூட்டித் தங்களைக் காங்கிரஸினின்றும் விலக்குவதற்காக மிதவாதிகள் செய்து வந்த முயற்சிகளை விவரமாய்ப் பிரசங்கித்தார். காங்கிரஸ் பழய நிலையினின்றும் மாறுமெதென மிதவாதிகள் உறுதிகூறினால், தலைவர் நிர்ணயத்தைத் தேசியக் கட்சியினர் எதிர்க்க மாட்டார்களென்று தெளிவாயெடுத்துரைத்தார். மற்றும் அங்கு வந்திருந்த பிரதிநிதிகள் யாவரும் கல்கத்தாவில் நிறைவேறிய நான்கு தீர்மானங்களைத் திரும்பவும் உறுதி செய்யுமாறு ராஷ் பிஹாரி கோஸுக்கு ஒரு வேண்டுகோளனுப்பினார்கள்.

(11ம் பக்கம் பார்க்க.)

இனாம்! இனாம்!! இனாம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே

(செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)

இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுண்டன் பேனாவையொத்த ஒருபுது மாதிரி "வெல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேனா இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்னிப்புடனும், மிக அழகாயும் டி பேனாவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், டி பேனாவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கி கொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றே செய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனாக்கள் பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர் சீக்கிரம் நமக்கு ஆர்டர்செய்து பெற்றுக் கொள்ளவும்.

"வெல்லஸ்லி" பேனாக்களில் பல மாதிரிகள்.

வெல்லஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனாவை போலவே யிருக்கும் விலை ... ... ரூ. 4 8.
டி ,, 12 ... ... ,, 5 0.
டி ,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனாவிற்கு இங்கிபோட வேண்டுமென்றால் டி பேனாவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனாவின் மேலுள்ள ஸ்பிரிங்கை தூக்கினால் பேனாவானது இங்கியை தானாகவே உட்கொள்ளும். ,, 5 8.

எமது விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனாம்.

ஸ்டேஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்ரி ௵ ஆவணி ௴ ௰௨ புதன்கிழமை.

25th AUGUST 1920.

தொழிலாளர்களின் நிலைமை

உலகம் முழுவதும் தொழிலாளர்களின் இயக்கம் வலுத்து வருகின்றது. மகாயுத்தம் முடிந்த பிறகு தொழிலாளர்களின் நிலைமை மிகவும் கேவலமாகிக் கொண்டுவரும் விஷயம் யாவரும் அறிந்ததேயாகும். ஓடிக்கொண்டிருக்கும் ரெயில் வண்டிகள் திடீரென்று நின்று விடுவானேன்? தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் எற்படுவானேன்? கவர்ன்மெண்டு அச்சுக்கூடங்களிலும்கூட வேலை நிறுத்தம் ஏற்படுவானேன்? இதற்குக்காரணமென்ன? அகவிலை ஏற்றமும் அதனால் உண்டாயிருக்கும் கஷ்டங்களேயாகும். ஏழைகளாகிய தொழிலாளர்கள் இந்நாளில் ஜிவித்திருப்பதே கஷ்டமாக விருக்கிறது. தொழிலாளர்கள் அநேக கஷ்டங்களுக்குள்ளாகி வேலைசெய்தும், ஏராளமான லாபத்தைச் சம்பாதித்து முதலாளிகளுக்குக் கொடுத்தும் முதலாளிகள் தொழிலாளர்களின் நிலைமையை அறியாமலிருப்பதுதான் அவர்களின் மனக்கொதிப்பிற்கும் அதிருப்திக்கும் காரணம். முதலாளிகள் தொழிலாளர் களிடத்தில் அன்புடனும் அநுதாபத்துடனும் நடந்துகொள்ளாததினால் பலவிதமான தீங்குகள் நேரிடுகின்றன. தொழிலாளர்களின் தற்கால நிலைமையைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் உண்மைவிளங்கும்.

பெரிய பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும்தொழிலாளர்கள் மிகவும்கேவலமான ஸ்திதியிலிருக்கிறார்கள். அவர்களுக்குப்போதுமான சம்பளம் கிடைப்பதில்லை; வாசம் செய்வதற்கும் சரியான வீடுகளும் கிடையா. அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பும் கற்றுக்கொடுக்கப்படுவதில்லை. தொழிற்சாலைகளில் சுகாதாரக்குறைவுகளுக்கிடையில் வேலைசெய்ய நேரிடுகிறது. அவர்கள் அதிக நேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒய்வு நாளும் அதிகம் கொடுக்கப்படுவதில்லை. தேக அசௌக்கியம் ஏற்படுகிற நாட்களுக்குச் சம்பளமும் வழங்கப்படுவதில்லை. அவர்கள் வயசுகாலத்தில் காலக்ஷேபத்திற்கு மார்க்கம் ஒன்றுமில்லாமல் விடப்படுகிறார்கள்.

காலம் முன்போலில்லை. தொழிலாளர்கள் தங்களது உண்மையான நிலையை அறிந்துகொண்டுவிட்டார்கள்; ஒற்றுமையோடிருந்தால் வேணடிய காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமென்னும் ரகசியத்தை அவர்கள் உணர்ந்து விட்டார்கள்; தங்கள் கோரிக்கைகளையெல்லாம் வேலை நிறுத்தத்தினால் கைக்கொள்ளலாம் என்று துணிந்து விட்டார்கள்; அடிக்கடி வேலை நிறுத்தம் செய்வதனால், தங்களுக்கும் தங்கள் முதலாளிகளுக்கும், பொது ஜனங்களுக்குச்சொல்லமுடியாத துன்பங்களும் நஷ்டங்களும் அசௌகரியங்களும் ஏற்படுகின்றன வென்பதைத்தொழிலாளர்கள் உணராமலில்லை. உணர்ந்தே அவர்கள் அவ்வழியில் செல்லுகிறார்கள். வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டவுடன் முதலாளிகள் முரட்டுப் பிடிவாதத்தால் யாதொருபரிகாரமும் தேடாமல் சும்மாவிருந்து விடுகிறார்கள். அதனால் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுப் பொதுஜன அமைதிக்கேக் கேடு உண்டாகின்றது. அப்பேர்ப்பட்ட சமயங்களில் தலைவர்கள் பட்சபாதமன்றி உண்மை நிலையை விசாரித்து நியாயம் புரிய வேண்டியது அவசியமாகும். ஒருமனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் வியாதிக்குக் காரணம் இன்னதென்று தெரிந்துகொண்டு மருந்து கொடுத்தால் எப்படி வியாதி சொஸ்தமடைகிறதோ அதேமாதிரி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் உள்ள சண்டையின் காரணம் இன்னதென்று தெரிந்துகொண்டு தலைவர்கள் பரிகாரம் தேடி சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இராஜப்பிரதிநிதி லார்டு செம்ஸ்போர்டு சென்றவாரம் கூடிய சட்டசபை முன்னிலையில் தாம செய்த பிரசங்கத்தில் தொழிலாளர் விஷயங்களைப் பற்றிக்குறிப்பிட்டார். அவைகளை நாம் சற்றுக் கவனிக்க வேண்டும். இந்தியாவில் தொழில்கள்முன்னேற்றமடைய பல வழிகளிருக்கின்றனவென்றும், அதற்குச் சாதகமான விளைபொருள்கள் ஏராளமாக நமது தேசத்திலேயே உண்டாகின்றனவென்றும். அவைகளைச் சரியானபடி உபயோகப் படுத்தத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு வேண்டுமென்றும், இதை அறிந்தே முதலாளிகள் அவர்களோடு அடிக்கடி சண்டைபோட்டுக் கொள்ளக்கூடாதென்றும் அப்படிச்சண்டைகள் ஏற்படும்பொழுது அவைகளைச் சமரஸமாகத்தீர்த்துவைப்பது கவர்ன்மெண்டாரின் கடமையென்றும், அவ்வாறு செய்ய ஜனத்தலைவர்கள் உதவி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசியது சந்தோஷமாகும். தவிர தொழிலாளர்களுக்குள் கட்டுப்பாட்டுக்கடங்கிய சங்கங்களிருக்கவேண்டுமென்றும் அவைகளின் வாயிலாய்த் தங்கள் குறைகளை வெளியிடவேண்டுமென்றும் சுட்டிக் காட்டினர். மேலும் உலகத்திலுள்ள தொழிலாளர்களுக்குள்ள கௌரவமும் செல்வாக்கும் இந்தியத் தொழிலாளர்களுக்கும் உண்டென்பதை உலகத்தார் அறியுமாறு சமீபத்தில் வாஷிங்டன் நகரில் நடந்த ஸர்வதேசத் தொழிலாளர் மகா நாட்டிற்கு இந்தியாவிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்பட்டார்களென்றும் அறிவித்தார். அன்றியும் சமீபத்தில் ஜினீவா என்னும் நகரில் கூடப்போகும் ஸர்வதேசத் தொழிலாளர் மகா நாட்டிற்கு இந்தியாவிலிருந்து சரியான பிரதிநிதி அனுப்படுவாரென்றும் வாக்களித்தார். மற்றும் பற்பல விஷயங்களைக் குறித்துச் சொல்லுகையில் தொழில் இலாகா மந்திரியின் அதிகாரத்தின் கீழ்வைக்கப் பட்டிருப்பதாலும் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க ஏராளமான பணம்வேண்டியிருக்குமாகையாலும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பின்றி ஒன்றும் முடியாததால் தொழிலாளர்களும் முதலாளிகளும் இதைக் கவனித்து நடந்துகொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தினர். இதை அறிந்தே கவர்ன்மெண்டார்களும் சில கமிட்டிகளை ஏற்படுத்தி அவைகளின் மூலமாய் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்குமுள்ள தகரார்களைத்தீர்த்து வைக்க முன்வந்திருக்கிறார்களென்றும் தொழில் விஷயத்தில் இந்தியா முன்போலிராமல் காலத்திற்கு ஒத்து நடந்து கொள்ளவேண்டுமென்றும் இவர் கூறினர்.

ஆகையால், தொழிலாளர்களெல்லோரும் ஒன்றுமையோடிருந்து தங்களுக்காக வேண்டிய காரியங்களைக் கைப்பற்றவேண்டும். தொழிலாளர்களுடைய கோரிக்கை நிறைவேறவேண்டுமானல் ஜினீவாதொழிலாளர் மகாநாட்டிற்கு நமது உத்தம தேசபக்தராகிய லாலாலஜபதிராயை இந்தியாவின் பிரதிநிதியாகக் கவர்ன்மெண்டார் அனுப்பவேண்டுமென்றுநாம் அறுவுறுத்தவேண்டும் இதைத் தொழிலாளர்கள்கவனிப்பார்களாக.

இடைநிவஸ விளக்கு.

கிராமப் பஞ்சாயத்து மசோதா.

இந்த மசோதாவை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். இம்மாதம் 17ந்தேதி கூடிய சட்டசபைக் கூட்டத்தில் ஸர். பி. இராஜகோபாலாச்சாரியார் இந்த மசோதாவைப் பிரரேபித்து இதன் முக்கிய அம்சங்களையும் இது சட்டமாக்கப்படுவதற்குரிய காரணங்களையும் அங்கத்தினர்களுக்கு விளக்கிக் கூறினர். ஆங்காங்குக் கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்தவேண்டி, ஓர் உத்தியோகஸ்தர் (அவருக்கு ரிஜிஸ்டிரார் என்னும் உத்தியோகப் பெயர் கொடுக்கப்படும்) நியமிக்கப்படுவரென்றும் அவர் பஞ்சாயத்துசபைகளின் மேற்பார்வையை வகிப்பரென்றும், அவருக்கு இவைகளைப் பற்றியுள்ள அதிகாரங்கள் கொடுக்கப்படுமென்றும், எந்தவிடத்திலேனும் பஞ்சாயத்து சபைகளமைவிருத்தியடைந்து பஞ்சாயத்தார்கள் தாங்களாகவே

எல்லாக் காரியங்களையும் செவ்வனே நடத்திக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டால் அப்போது அந்த உத்தியோகஸ்தருக்கு அந்தப் பஞ்சாயத்து சபைகள் மீதுள்ள அதிகாரம் நீக்கப்படுமென்றும் ஸர். பி. இராஜகோபாலாச்சாரியார் அறிவித்தார். இது சரியான யோசனையென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வரும் தோரணையில் பஞ்சாயத்து சபைகள் ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. இந்த மசோதா பொறுக்கியெடுக்கப்பட்ட மெம்பர்களடங்கிய கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கிறது. இக்கமிட்டியார் நன்கு ஆலோசித்து மசோதாவிலிருக்கும் பிறபோக்கான கொள்கையையும் முறைகளையும் புறக்கணித்துக் காலத்திற்கேற்றவாறும் கிராம முன்னேற்றத்திற்கு ஏற்றபடியும் மசோதாவைத் திருத்தி அமைப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

குடிக்கூலி.

எங்குப் பார்த்தாலும் நகரங்களில் குடிக்கூலி அதிகமாயிருக்கிறதென்றும் வீட்டுக்காரர்கள் வாடகைக்குக் குடியிருப்போர்களை அதிக வாடகையால் வருத்துகிறார்களென்றும் கூக்குரல் கிளம்புகிறது. சென்னை நகரில் இந்தக் கூக்குரல் பலமாகப் பரவவே கனம் மிஸ்டர் அருமைநாதன் என்பவர் சென்றவாரம் கூடிய சட்டசபையில் குடிக்கூலியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வந்தார். இது பலமாக வாதிக்கப்பட்டுக் கடைசியாகத் தோற்றுப் போய் விட்டதென்றாலும், இந்த மசோதாவை எதிர்த்துப் பேசியவர்கள் ஒருவரேனும் வாடகைக்குக் குடியிருப்போர்கள் படுமகஷ்டங்களை மறுக்கவில்லை; வாடகை ஒன்றுக்கு மூன்று பங்காக அதிகரித்திருப்பதையும் இவர்கள் குறைத்துப் பேசவில்லை. இங்ஙனமிருக்க, இந்த மசோதாவை ஆட்சேபித்தவர்கள் என்ன பரிகாரம் சொன்னார்கள்? ஒரு சட்டத்தால் வாடகையைக் கட்டுப்படுத்துவது கூடாதென்று சொல்லி மௌனமாயிருந்து விட்டார்கள். பிறகு குடியிருப்போர்களின் கதிதானென்ன? வென்று நாம கேட்கிறோம். கவர்ன்மெண்டும் முனிஸிபாலிடியார்களும் தான் பதில் சொல்ல வேண்டும்.

அடுத்த வைசிராய்

லார்ட் செம்ஸ்போர்டுக்குப் பிறகு இந்தியாவுக்கு யார் இராஜப்பிரதிநிதியாக வரலாம்? என்று ஒரு கேள்வி கேட்கப்படுறது. சிலர் மிஸ்டர் மாண்டேகுவைச் சிபாசு செய்கின்றனர்; வேறு சிலர் மிஸ்டர் வின்ட்ஸன் சர்ச்சில் என்பாரையும் லார்ட்பர்க்கன்ஹெட்டையும் சிபார்சு செய்கின்றனர். மற்றும் சிலர் யார் யாரையோ கூறுகின்றனர். இந்தியக் கவிச்வரராகிய டாக்டர் ரவீந்திரநாத்டாகூர் தற்காலமிருக்கும் நிலையில் மிஸ்டர் மான்டேகுவே சரியானவரென்று அபிப்பிராயப்படுகிறார். இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகு பஞ்சாப் விஷயத்திலும் சீர்திருத்த விஷயத்திலும் இந்தியப் பொது ஜன அபிப்பிராயத்தைப் பாராட்டித் திருப்திகரமாக நடந்து கொள்ள வில்லையென்றாலும் அவர் தற்சமயம் இங்கிலாந்திலிருக்கும் அரசதந்திர நிபுணர்களில் தாராளக்கொள்கையுடையவரென்றே நாம் கொள்ள வேண்டும். அவர் சீர்திருத்தத்தைப் பிரிட்டிஷ் முதலாளிகளும், ஆங்கிலோ இந்தியர்களும், அதிகாரவர்க்கத்தினர்களும் ஒரேமுகமாய் எதிர்க்கும் போது, ஒன்றையும் கவனியாமல் அதைச் சட்டமாக நிறைவேற்றினாரென்பது இந்தியர்கள் ஒப்புக்கொள்வார்கள். மேலும், மிஸ்டர் மாண்டேகு இந்தியாவிற்கு வந்துபோயிருக்கிறார். இந்தியர்களின் கோரிக்கைகளைக் கூடியவரையில் அறிந்திருக்கிறார். நல்லெண்ணத்துடன் சீர்திருத்தம் அமுலுக்குக்கொண்டு வரப்படுமென்றும் பகிரங்கம் செய்திருக்கிறார். இங்கிலையில் பிற்போக்கான கொள்கையுடையவரும், இந்தியர்களின் விருப்பங்களை அறியாதவரும் ஊர் பெயர் தெரியாதவருமான ஒருவர் நியமிக்கப்படுவதை விட மிஸ்டர் மான்டேகுவே இராஜப்பிரதிநிதி பதவிக்கு ஏற்றவரென்று டாக்டர் டாகூர் சொல்லுவதை நாம் அங்கீகரிக்கிறோம். இந்தியாவிலுள்ள தேசியப்பத்திரிகைகளும் நாம் எழுதுவது போலவே அபிப்பிராயப்படுவது சந்தோஷமாகும்.

எப்படி மறக்க முடியும்?

இம்மாதம் 20ந்தேதி இராஜப்பிரதிநிதி சட்டசபை ஸிம்லாவில் கூடியது. லார்ட் செம்ஸ் போர்டு வழக்கம் போல சட்டசபை அங்கத்தினர்களுக்கு ஓர் ஆரம்பப் பிரசங்கம் செய்தார். கடைசியாகவேனும். இப்பிரசங்கத்தினின்றும் துன்புறுத்தப் பட்ட இந்தியர்கள், மனமிடிந்து ஏங்கி நிற்கின்ற இந்தியர்கள், ஒருவாறு ஆறுதல் கொள்ள இடமிருக்குமென்று நம்பியிருந்தோம். ஆகா! நாம் கொண்ட நம்பிக்கை வீணாகியது. என்செய்வது?' லார்ட்செம்ஸ்போர்டு சிறிதும் இந்தியர்களுடைய மனோவேதனைகளை உள்ளபடி அறியவில்லையேயென்று நாம் வருந்துகிறோம். லார்ட்செம்ஸ்போர்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசுகையில் பஞ்சாப் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். 'போனது போகட்டும். இனி நாம் அதைப்பற்றிப் பேசுவதனால் இருபக்கங்களிலும் துவேஷம் அதிகரிக்கும். சரித்திரக்காரர்கள் எழுதும் தீர்ப்புக்கு நான் விட்டுவிடுகிறேன். நாம் வரப்போகும் தேசத்தின் எதிர் கால நிலையைக் கவனிப்போம். பரஸ்பரம் ஒத்துழைப்பதற்குப் பலசந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன" என்று இவ்விதமான உயர்ந்த தத்துவ தோரணையில் லார்ட்செம்ஸ் போர்டு கூறியதை நாம் பாராட்டுவோமாயினும், பஞ்சாப்விஷயத்தை இந்தியர்கள் அடியோடு மறந்துவிடுவது அசாத்தியமென நாம் அவரை மன்றாடிக்கேட்டுக்கொள்கிறோம்.

அஞ்சுகிறோம்

செம்ஸ்போர்டு பிரபுவே! ஒரு நிமிஷப் பேச்சில் பஞ்சாப் படுகொலையை மறந்து விடுங்கள் என்று இந்தியர்களுக்கு உபதேசம் செய்து விட்டீர்கள். குற்றவாளிகளெல்லோரும் நியாயப்படி தண்டிக்கப்படவில்லையே; இந்தியர்களுக்குச் சரியானபடி நியாயம் வழங்கப்படவில்லையே; என்று நாங்கள் உங்களைக் கேட்கக் கூடாதோ? இந்தியர்களுக்கு உபதேசம் செய்ய உங்களுக்கு மனம் வந்ததே யொழிய ஆங்கிலோ இந்தியர்கள் செய்யும் தீச்செயல்களைக் கண்டிக்க மனம் எழும்பவில்லையே? இதற்கென்ன காரணம்? இந்தியா கவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் பாவி டையர் செய்த செயல் அநியாயமென்று தீர்மானித்திருக்க இரண்டு கவர்ன்மெண்டார்களுடைய தீர்ப்பையும் ஆங்கிலோ இந்தியர்கள் அவமதிப்பதை நீங்கள் அறியாததேனோ? ஆங்கிலோ இந்தியர்களும் அவர்களுடைய துஷ்டப் பத்திரிகைகளும் நாளுக்கு நாள் செய்து வரும் அடாதசெயலை, இந்தியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கு முன்னிருந்த சினேகபாவத்தைக் குலைத்துவரும் துரோகச்செயலை, இந்தியாவில் அமைதியின்மையை அதிகரிக்கச்செய்துவரும் தீச்செயலை நீங்கள் கவனியாமலிருந்துவருவது நியாயந்தானோ? சண்டாளடையருக்கு ஆங்கிலோ இந்தியர்கள் பண உதவி செய்வதோடு அவன் "இந்தியாவைக் காப்பாற்றவந்த கடவுள் தூதன்" என்றல்லவோ சொல்லி அவனுக்கு ஒரு சந்தோஷபத்திரத்தையும் வாசித்து அனுப்பப் போகிறார்கள். ஏ. பிரபுவே! இவர்கள் வெறுக்கக்கூடிய செயல்கள் செய்து வரும் போது நீங்கள் கோரிய நோக்கம் நிறைவேறுமோ வென்று அஞ்சுகிறோம்.

விலை குறையாது

நாம் முன்னர் எதிர் பார்த்தபடியே, லார்ட் செம்ஸ்போர்டும் உண்மைநிலையை அறிவித்து விட்டார். உணவுப் பொருள்களின் விலைகள் சமீபத்தில் குறையுமென்று சொல்வதற்கில்லை யென்றும் ஒருகால் குறையாமலேயிருக்குமென்றும் யுத்தகாலத்திற்கு முன்பிருந்த உணவுப் பொருள்களின் நிலை (ரூபாய்க்கு நாலுபடி அரிசி விற்ற காலம்) இனி ஏற்படுவது சந்தேகமென்றும் இராஜப்பிரதிநிதியவர்கள் பட்டவர்த்தனமாய்க் கூறிவிட்டார்கள். இவர் கூறியதற்குக் காரணம் நிதர்சனமாயிருக்கிறது. யுத்தக்களைப்பினால் யூரோப்தேசத்தில் ஜனங்கள் சீர்குலைந்தும் தொழில்கள் செய்யச் சக்தியின்றியுமிருக்கிறார்கள். ஜெர்மெனி பிரான்ஸ், பெல்ஜியம், ஆஸ்டிரியா போன்ற நாடுகளில் தொழில்கள் சின்னாபின்னப் படுத்தப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் ஒழுங்காக இன்னும் வேலை தொடங்கவில்லை. தொழிலாளர்களுக்குள் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. இத்தியாதி காரணங்களின்றி மேற்குறிப்பிட்ட நாடுகளின் அரசாங்கத்தார்களுக்குப் பணநெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. இங்கிலையில் அதாவது யூரோப்பிலும் மற்றத் தேசங்களிலும் உணவுப் பொருள்களின் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் தருவாயில் இந்தியா உலகத்து மற்றத் தேசங்களோடு பிணைக்கப்பட்டிருக்கும் காலையில் இந்தியாவில் விளையும் உணவுப் பொருள்கள் வெளி

சாஸ்திரீயப் பகுதி.

சென்ற வாரம் புதன்கிழமை தஞ்சை கலியாணசுந்தரம் கலாசாலையைச் சார்ந்துள்ள இயற்கை சாஸ்திர ஞான அபிவிருத்தினி சங்கத்தின் அங்கத்தினர்களில் சிலர் வல்லமும் அதன் சுற்றுப்புறங்களையும் சுற்றிப்பார்த்து அவ்விடத்தின் பூமி நிலைமைக்கும் அங்குள்ள பயிர் வகைகளின் வளர்ச்சிக்கும் யாது ஒத்துமைகளிருக்கின்றனவென்று கண்டறிந்து வந்தார்கள். அவர்கள் கண்டறிந்தவைகளை நாம் கீழே பிரசுரிக்கிறோம்:—

வல்லம், தஞ்சாவூர் டவுனுக்குத்தென்மேற்கிலுள்ள ஒரு பீடபூமி? இது தென்மேற்கிலிருந்து வடகிழக்காய் வாட்ட முற்றிருக்கிறது. சமீபத்தில் நீர் நிலைகள் அல்லாததும பூமி மட்டத்திற்கு வெகு ஆழத்தில் தண்ணீர் காணக்கூடியதுமான ஒரு வரண்ட மேட்டுப் பிரதேசம். இதில் ஒருகாலத்தில் ஒரு அரண் இருந்திருக்க வேண்டுமென்பதற்குச் சில அறிகுறிகள் காணப்படுகின்றன.

தற்காலம் மகா வரண்ட பிரதேசமாயிருந்தபோதிலும் அந்தப் பிரதேசம் ஒரு காலத்தில் தண்ணீர் சூழ்ந்துள்ளதாக இருந்திருக்க வேண்டுமென்று அறியக்கூடியதாக இருக்கின்றது. அந்த இடத்தில் கூழாங்கற்கள் ஏராளமாக அகப்படுகின்றன. கூழாங்கற்கள் ஓடும் தண்ணீரால் செய்யப்படும. கெட்டிப்பாறைத் துண்டுகள் பாறைகள் தண்ணீரால் அடிபட்டு உருண்டு புறண்டு வரும்பொழுது உருண்டை வடிவத்தை அடைகின்றன. மேலும் அங்கு அகப்படும் செம்பாறைகள், காங்கிரீட் கட்டைகள் செய்யப்படுவதுபோல், வெகு காலமாக தண்ணீர் அரளைக் கற்கள், மணல் செவவல் நிறமுள்ள களிமண் முதலியன சேர்ந்து உண்டாயிருக்க வேண்டுமென்றும் தெரிய வருகிறது. மேலும் சுண்ணாம்புக் கற்கள் அவ்விடத்தில் அகப்படுகின்றன. இவை தண்ணீரில் வாழும் கிருமிகுலங்களால் உண்டுபண்ணப்படுகின்றன என்பது பூமி சாஸ்திரம் அறிந்தவர்களின் சித்தாந்தம். மேலும் பாறை சிவப்பு நிறமுள்ளதாக இருப்பதாலும் கற்கள் கனமாக இருப்பதாலும் இப்பிரதேசத்தில் இரும்பு அகப்படும் என்றும் அறியலாம்.

அங்கு இயல்பாக வளர்ந்துள்ள பயிர் வகைகள் அதிகமில்லை. பெரும்பாலும் முட்கள் உள்ளனவும் அதிக வளர்ச்சியில்லாதவையுமான பயிர்வகைகளே காணப்படுகின்றன. கருவை, வேல், வெள்வேல், காரை, களா, முதலியவைகளே முக்கிய பயிர் வகைகள். சப்பாத்தி ஏராளமாகச் செழித்துக்காணப்படுகின்றது. ஆவாரை விளாரி முதலிய புதர்ப் பயிர்களும் அங்குள்ள சிற்சில மணற் பிரதேசங்களில் பயிராகியிருக்கின்றன.

அங்குள்ள பயிர் வகைகளில் முட்கள் விசேஷித்துக் காணப்படுவதுமன்றி அவைகளின் இலைகளும் மிகச் சிறியனவாயிருக்கின்றன. முட்களை வகிப்பதும் சிறிய இலைகளை அடைந்திருப்பதும் தண்ணீர் இல்லாத வரண்ட இடங்களில் பயிராகும் பயிர் வகைகளின் இயற்கை சுபாவம் என்று அறிகிறோம். இச்சுபாவம் அவைகளுக்குச் சந்தர்ப்பத்திற்கும் அக்கம்பக்க நிலைமைக்கும் ஒத்து ஏற்பட்டிருப்பதாகஎண்ணவேண்டியதாகிறது. உயிர்ப்பிராணிகள் யாவற்றிற்கும் இவ்வித சுபாவம் இருப்பது இயல்பு. உணவு அகப்பட சௌகரியமில்லாத காலங்களில் செட்டாகச் செலவழிக்கும் முறைகளைத் தேடிக்கொள்வது அறிந்த ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள ஒரு புத்தி விசேஷம். இவ்வித விசேஷ குணம் பயிர்வகைகளிடத்திலும் இருக்கக் காண்கிறோம்.

பயிர்களுக்கு வேண்டுள்ள எல்லா உணவுப் பொருளும் பூமியிலிருந்தே திரவ உருவமாக விசேஷித்துக் கிடைக்கின்றது. வளர்ச்சித்தேவையான தண்ணீர் மட்டும் பயிரின் உடலிற் தங்க மிகுதியாக உள்ளது நீராவியாக இலைப்புறங்களிலுள்ள காற்றுத் துவாரங்கள் வழியாகச் சென்று விடுகிறது. இலையின் பரப்பு விசாலமாக இருந்தால் அதில் காற்றுத்துவாரங்கள் அதிகரிக்கின்றனவால் நீராவியால் வெளிச் செல்லும் தண்ணீரும் அதிகரிக்க வேண்டியதாகும். ஆகையால் வரண்ட இடத்தில் உள்ள பயிர்வகைகள் அகன்ற இலைகளை அடைந்திருந்தால் அதி சீக்கிரத்தில் தண்ணீர் ஆவியாகிப் பயிருக்குத் துர்பிக்ஷ மேற்பட்டு சீக்கிரத்தில் அவை உயிரிழக்க வேண்டியதாகும்.

மேலும் அதிகமாக உள்ளிருக்கும் தண்ணீர் ஆவியாக மாருவண்ணம், அப்பிரதேசத்துப் பயிர்களின் சிலவற்றிற்கு மற்றொரு விசேஷ குணம் ஏற்பட்டிருக்கக் காண்கிறோம. சாயங்காலங்களில் இப்பயிர் வகைகளின் இலைகள் ஒன்றோடொன்று மூடிக்கொண்டு காம்புகளைத் தொங்க விட்டுக் கொண்டுத் தூங்கும் நிலைமையில் இரவு முழுமையும் இருந்து பொழுதுவிடிய மறுபடியும் நிமிர்ந்து கொள்ளும் தன்மை பார்ப்பவருக்கு மிக்க ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றன. இவ்விதத் தன்மையைத் தாவர சாஸ்திர நிபுணர்கள் பயிர்களின் தூக்கம் என்று அறிவிக்கிறார்கள்.

அவைகளில் காணக்கூடிய முட்கள் அவைகளுக்கு அளித்துள்ள ஆயுதம். பயிர் வகைக்கும் தம் சொத்தைக் காக்கவும், தம்மைத் தொந்தரவு செய்ய வரும் அன்னிய உயிர் வகைகளிடமிருந்து தப்பித் தம் சரீரத்தை ரக்ஷித்துக்கொள்ள ஆயுதம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

ஆதலால் பயிர்வகைகளிடமிருந்து நாம் அறிய வேண்டியவை அநேகம் இருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை.

இவ்விதம் பயிர் வகைகளுக்கு உள்ள குணங்களை இச்சங்கத்தார் உணர்ந்து போதப் பிரயோஜனத்தை முன்னிட்டுத் தங்கள் சொன்னவைகளை வெளியிடுகின்றனர்.

நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படாமலிருக்குமா? என்பதை நேயர்களே ஊகித்தறிந்து கொள்ள வேண்டும். உலகத்தில் அமைதியும சமாதானமும் ஏற்பட்டு அவ்வந்தத் தேசங்கள் தத்தம் காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு போவதற்கு இன்னும் வெகுவருஷகாலம்செல்லும். அதுவரையில் உணவுப் பொருள்களின் நிலை இப்பொழுது போலவே யிருக்குமென்று நம்பப்படுகிறது.

இஃதென்ன வேஷம்?

இந்தியாவிலுள்ள ஐரோப்பிய சங்கத்தார்கள் வேஷம் போடுகிறார்கள். இம்மாதம் 20 ந் தேதி கல்கத்தா ஐரோப்பிய சங்கத்தார் ஒரு கூட்டம் கூட்டிப் பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்தார்கள். அப்போது ஐரோப்பியர்கள் அரசாங்க விஷயங்களில் தலையிட வேண்டுமென்றும், அவர்கள் ஜனங்களுக்குள் தொழிற் கல்வியைப் பரவவைக்க வேண்டுமென்றும், சுகாதாரம் விவசாயம், தொழில் (அதிகமாக வீட்டுத் தொழில்) கால் நடைகளை வளர்த்தல்முதலிய பல விஷயங்களில் கவலை செலுத்தவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டார்கள். இவர்கள் இந்தியர்களோடு ஒத்துழைக்கமாட்டார்களாம்! ஆனால் சீர்திருத்தம் நிறைவேறுவதற்கு முயற்சிகள் செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் இந்தியாவுக்கு வந்து, இருக்கும் வரையில் பணம் சம்பாதித்துக் கொண்டு பிறகு தங்கள் ஜன்ம தேசம் போகும் இவர்கள் மேற்குறிப்பிட்டவாறு பேசியது ஆச்சரியமாயிருக்கிறது. இஃதென்ன வேஷமான பேச்சோ! தெரியவில்லை. ஒருகால் இவர்கள் உண்மையாகவே இந்தியா முன்னேற்றம் பெற வேண்டுமென்று விரும்பினால் இவர்கள் ஏன் இந்தியர்களோடு ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோமென்று சொல்லக் கூடாது? இவர்களுக்கு அமிதவாதிகள்தான் பிடிக்கவில்லை. மிதவாதிகள் கூடாவா பிடிக்கவில்லை. இப்பொழுதேனும் மிதவாதிகள் ஒரு பாடம் கற்றுக்கொள்வார்களா?

மதிப்புரை.

பஞ்சாயத்து.

இப்பெயர் கொண்ட மாதப் பத்திரிகையின் ஜூலை மாத ஸஞ்சிகையை வரப்பெற்றோம். இது திரிச்சியினின்றும்வெளிவருவது. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் எம். எஸ். ஆர். சந்திரன். அவர்கள். தமிழ் நாடுகளிலுள்ள கிராமங்களிலெல்லாம் பஞ்சாயத்து ஏற்படவேண்டுமென்பதே இப்பத்திரிகையின் முக்கிய நோக்கமாக விருக்கிறது. தாலுக்கா போர்டுகள், ஜில்லா போர்டுகள், முனிஸிபாலிடிகள், யூனியன்கள், யூனியன் பஞ்சாயத்துகள், காட்டு நிர்வாக நீர்ப்பாசன பஞ்சாயத்துகள், பொதுவாக கிராம வாழ்க்கைக் குரிய விஷயங்கள் ஆகிய இவற்றையே விரித்துக்கூறும் இப்பத்திரிகையை எல்லோரும் ஆதரிக்கவேண்டியது அவசியம். கிராமப் பஞ்சாயத்து ஜனப்பொறுப்பாட்சிக்கு அடிப்படையாதலால் ஒவ்வொரு கிராமத்தாரும் இதை வாங்கி வாசித்தால் மிகுந்த பயனை அடைவார்கள். இதன் வருஷ சந்தா ரூ. 3. வேண்டுவோர் மானேஜர், "பஞ்சாயத்து" சம்மர் ஹௌஸ், தென்னூர், திரிச்சி என்ற விலாசத்துக்கு எழுதவும்.

பாரதமாதா.

இஃதோர் சிறந்த தமிழ்ப்பத்திரிகை. பிரதி மாதந்தோறும் ஸ்ரீரங்கத்தினின்றும் பிரசுரமாகும். இதில் அரிய விஷயங்கள் பெரியோர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான். கே. எஸ். இராமசுவாமி சாஸ்திரிகள் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், ஸ்ரீமான். வி. சுப்பிரமணிய பாரதி முதலிய பிரமுகர்கள் இப்பத்திரிகையினிடத்தில் அபிமானம் காட்டி விஷயதானம் செய்திருக்கிறார்கள். இதை ஒவ்வொரு தமிழரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இதன் சந்தா ரூ. 3. வேண்டுவோர் மானேஜர் "பாரதமாதா" ஸ்ரீரங்கம் என்று எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

ஜலாசய நிர்மாண லட்சண சாஸ்திரம்.

இது, ஸ்ரீலலிதா நவரத்னமென்னும் மனையடி சாஸ்திரம் இயற்றிய ஸ்ரீமான். ஆர். கோபாலய்யரால் எழுதப்பட்டதாகும். ஸ்ரீமான். கோபாலய்யர் கிணறு, குளம், குட்டை முதலியவைகள் எந்தெந்த விடங்களில் வெட்டலாம்; அவைகளிலிருக்கும் தண்ணீரின்? தன்மையாது முதலிய பல விஷயங்களைப்பற்றி இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு மிராசுதார்க்கும், ஒவ்வொரு வீட்டுக்காரனுக்கும் உபயோகமுள்ள இப்புஸ்தகத்தில் காணப்படும் முக்கிய விஷயங்களை மாத்திரம் குறிப்பிடுகிறோம்.

நீர் நிலைப்பிரிவுகளின் விவரங்கள், நீர் இத்தனை வகை என்பது; நிலத்தின் பிரிவுகளும், அவற்றின் அடையாளங்களும் இன்னின்ன பூமியில் நீர் இவ்வளவு ஆழத்தின் கீழ் காணப்படுமென்பது; பூமியின் பேரில் இருக்கப்பட்ட மரஞ்செடி இவற்றைக்கொண்டு தண்ணீர் ஆழம் தெரிதல்; நல்ல தண்ணீர் கெட்ட தண்ணீர் என்று கண்டுபிடித்தல், சில பரீட்சைகளினால் தண்ணீரைக் காணும் வகை; கிராமம், ஆலயம், வீடு இவைகளுக்கு இன்னின்ன பாகத்தில் ஜலாசயங்கள் உண்டாகலாமென்பது; இன்ன காலங்களில் ஜலாசயங்கள் வெட்டலாமென்பது; கெட்ட தண்ணீரைச் சுத்தம் செய்யும் வழி; பழைய கிணறு முதலியவைகளைக் காணும் வழி; பூமிக்குள் இருக்கப்பட்ட கருங்கற்களை உடைக்கும் வழி; நீர்த்தாரைகள் காணப்படும் மார்க்கம்; ஜலாசயங்களைக் காப்பாற்றும் வழி முதலியவைகளைப்பற்றி வாசித்தால் ஜனங்கள் நீர் நிலைகளைக் காப்பாற்றுவதோடு, நல்ல தண்ணீரை உபயோகப்படுத்தவே முந்துவார்கள். இது எல்லோருக்கும் உபயோகமுள்ள புத்தகமாதலால், இதை ஸ்ரீமான். ஆர். கோபாலய்யர், புலிவலம், விஜயபுரம் போஸ்டு, தஞ்சாவூர் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை அணா எட்டு.

டாக்டர் பீட்டர் அவர்களால்
கண்டு பிடிக்கப்பட்ட சுகானந்த
(இரகஸ்ய ரப்பர் பை.)

SUKANAND.

இக்கருவி அமெரிக்கா தேசத்தில் மிருதுவான ரப்பரால் தயார் செய்யப்பட்டது. இதை உபயோகித்தால் ஸ்திரீ சம்பந்தமான (Venereal Diseases) மேகரோகங்கள் அணுகாமல் சரீரத்தை வெகு ஜாக்கிரதையாய் காப்பாற்றும். ரப்பர் பை 1-க்கு டின்னுடன் ரூபா 1—4—0.

டாக்டர் பீட்டர்,
நெ. 3. இருளப்பன் வீதி, மதராஸ்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்.
O. P. 157/20.

மைனர் தட்சிணாமூர்த்தி விஷயமாய் சாமிநாதபிள்ளை. } மனுதார்
கமலாம்பாள் வகையரா 4-ரெஸ்பாண்டென்ட்கள்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்ப தென்னவென்றால், மேற்கண்ட மைனர் தட்சிணாமூர்த்தியின் சரீரத்துக்கும் சொத்துகளுக்கும் தன்னைக் கார்டியனாக நியமிக்கவேணுமென்று மனுதாரரால் ஷை O. P. 157/20 நம்பரில் மனு கொடுக்கப்பட்டு நோட்டீஸுக்கு உத்திரவாய் 3-9-20 யில் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் ஈரங்கிபோடப்பட்டிருக்கிறது. அதுவிஷயமாய் ஆட்சேபனையுள்ளவர்கள் ஷை தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாமென்பதை இதன் மூலமாய் அறியக் கோரப்படுகிறது.

தஞ்சாவூர், } M. R. Kuppusamy
25-8-1920. } Aiyangar,
Vakil.

உலகப்போக்கு.

ஜில்லா.

தஞ்சை ஜில்லா ரிஜிஸ்டிரார் மிஸ்டர் டி. கே. சுப்பிரமணிய ஐயர் வட ஆறுகாடு ஜில்லா ரிஜிஸ்டிராராக நியமனம்.

* *

திருநெல்வேலி ரிஜிஸ்டிரார் மிஸ்டர் எ. வி. நாகராஜராவ் தஞ்சை ஜில்லா ரிஜிஸ்டிராராக நியமனம்.

* *

மிஸ்டர் என். சுப்பிரமணியராவ் பட்டுக்கோட்டை தாலுக்காபோர்டு மெம்பராகவும், பிரஸிடென்டாகவும் நியமனம்.

* *

மிஸ்டர் எம். கே. குப்புசாமி வாண்டையார் தஞ்சை தாலுக்கா போர்டு மெம்பராக நியமனம.

* *

மிஸ்டர் ஐ. குமாரசாமி பிள்ளை தஞ்சை முனிஸிபல் கவுன்ஸிலராக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்

* *

மிஸ்டர் எம். வி. ரத்னசாமிபிள்ளை மன்னார்குடி தாலுக்கா போர்டு மெம்பராக நியமனம்.

* *

கும்பகோணம் 11-வது வார்டு கவுன்ஸிலராக விருந்த மிஸ்டர் எஸ். ராமசுப்பா செட்டியார் யாது காரணத்தினாலோ தமது முனிஸிபல் கவுன்ஸிலர் ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

இம்மாதம் 29ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் தஞ்சை வரிகொடுப்போர் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று காந்தி ஸௌக்கில் (மணிக்கூண்டு மைதானம்) டாக்டர் இராமசந்திர செட்டியார் அக்கிராசனத்தின் கீழ் கூடும்.

* *

இம்மாதம் 14ந் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்குத் தஞ்சை கீழவீதி அரண்மனைத் தோட்டத்தில் இந்நகரவாசியான ஸ்ரீமான் எஸ். எஸ். ஆர். எம். இராமநாதன் செட்டியார் கௌரவமாஜிஸ்டிரேட்டாகவும், தாலுக்கா போர்டு மெம்பராகவும் நியமிக்கப்பட்டிருப்பதை உத்தேசித்து மெஸர்ஸ் டி. எ. கோபிநாதராவ் ஷாப் சொந்தக்காரர் மிஸ்டர் டி. ஜி. ஆத்மாராம்ராவ் அவருக்கு ஒரு விருந்துக் கச்சேரி நடத்தி வைத்தார். சங்கீதக்கச்சேரியும் நடந்தது.

* *

தஞ்சை ஜில்லா மகாநாடு பாபாநாசத்தில் கூடியபோது, அங்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து, வந்திருந்த பிரதிநிதிகளுக்கு உதவிகள் புரிந்த வாலண்டியர்களுக்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை 22ந் தேதி ஸ்ரீமான். வி. எஸ். கிருஷ்ணசாமி ஐயர் ஒரு விருந்து வைத்தார்கள். வாலண்டியர் தலைவர் மிஸ்டர் இராமபத்ரன் செய்த ஊழியங்கள் பாராட்டிப் பேசப்பட்டன.

* *

மன்னார்குடி தாலுக்கா எலிமெண்டரி ஸ்கூல் மாஸ்டர்கள் சங்கத்தார் இம்மாதம் 3ந் தேதி கூடிய கூட்டத்தில் தீர்மானித்துக்கொண்டபடி மறு கூட்டம் அடுத்த மாதம் 4-9-20ந் தேதி மன்னார்குடியில் கூடும். அவ்வமயம் போர்டு, முனிஸிபல், எய்டெட் ஸ்கூல் உபாத்தியாயர்கள் விஜயம் செய்வார்களென்று காரியதரிசி அறிவிக்கிறார்.

* *

நாகப்பட்டணம் தாலுக்கா அந்தணப்பேட்டை வட்டம் மகாஜன சபையின் ஆதரவின் கீழ் மஞ்சக்கொல்லையில் மிஸ்டர் தியாகராஜ ஞானியார் இம்மாதம் 22ந் தேதி மாலை 5 மணிக்குக கனம் கான்பகதூர் அகமத் தம்பி மரைக்காயர் அக்கிராசனத்தின் கீழ் தற்கால நிலையைப்பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார்.

* *

நீடாமங்கலந்தைச்சேர்ந்த 'மேல் அலவாஞ்சேரியிலிருக்கும் சுப்பிரமணிய ஐயர் பெண்சாதியை மன்னார்குடி பாமனியைச்சேர்ந்த நடேசகுருக்களும் முகமத் ராவுத்தரும் பட்டப்பகலில் கொலை செய்துவிட்டதாக வழக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. குற்றவாளிகள் அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* *

இம்மாதம் திங்கட்கிழமை 23ந் தேதி மாலை 5 மணிக்குத் தஞ்சை கலியாணசுந்தரம் சரித்திர ஆராய்ச்சி சபையின் ஆதரவின் கீழ் ஸ்ரீமான். இ. சூரியநாராயண அய்யர் பி. எ, பி. எல், ஓர் விசேஷப் பிரசங்கம் செய்தார்.

* *

இம்மாதம் 21ந் தேதி தஞ்சையிலுள்ள இந்திர குலாதிபர்கள் யாவருமடங்கிய ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. ராவ்பகதூர் வி. எ. வாண்டையார் அக்கிராசனம் வகித்தார். அக்கிராசனர் இந்திர குலாதிபர்களுக்கென ஒரு சங்கம் ஏற்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த பிறகு திரிச்சி எஸ். பி. ஜி. காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் வேங்கடசாமி நாட்டார், பாப்பாநாடு இளைய ஜமீன்தார் முதலியவர்கள் பேசினார்கள். எல்லோரும் ஏக மனதாய் "தஞ்சை இந்திர குலாதிபர்கள் சங்கம்" என்னும் பெயர் கொண்ட சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இதற்கு ராவ்பகதூர் ஆர். சுவாமிநாதத் தேவர் அக்கிராசனராகவும், ராவ்பகதூர் எ. அண்ணாசாமித் தேவர் வைஸ்பிரிஸிடெண்டாகவும், ஸ்ரீமான்கள் ராஜப்பா, எம். நடராஜன் முதலியோர் காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இதன் நிர்வாக கமிட்டியில் சுமார் 25 மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு ராவ்பகதூர் வி. எ. வாண்டையார் அக்கிராசனராக விருக்கிறார். ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. இதுவரையில் சுமார் இரண்டாயிரம் வசூலாகியிருக்கிறது. ராவ்பகதூர் வி. எ. வாண்டையார் 500 ரூபாயும், பாப்பா நாடு ஜமீன்தார் 500 ரூபாயும் ராவ்பகதூர் அண்ணாசாமித் தேவர் 500 ரூபாயும், நிடவாசல் ஜமீன்தார் 100 ரூபாயும், மிஸ்டர் முத்துசுவாமி வாண்டையார் 100 ரூபாயும் உதவி செய்திருக்கிறார்கள். சில்லரையாகச் சிலர் உதவி செய்திருக்கிறார்கள். இந்திர குலாதிபருக்குள் திவீரப் பிரசார வேலை செய்ய காரியதரிசிகள் யோசித்திருக்கிறார்கள்.

* *

மாயவரம் கௌரவ மாஜிஸ்டிரேட்டும் தாலுக்கா போர்டு மெம்பருமான மிஸ்டர் டி. இ. ஹபிபுல்லா சாகிப் பகதூர் இருபதவிகளையும் ராஜிநாமா செய்துவிட்டார்.

உள்நாடு.

* *

காங்கரஸ் வேலை விஷயமாக இங்கிலாந்திற்குச் சென்றிருந்த மிஸ்டர் படேல் இம்மாதம் 20ந் தேதி பம்பாய் வந்திறங்கினார்.

* *

மிஸ்டர் சையத் அகமத் ஷரீப் தாம் வகித்து வந்த சிதம்பரம் முனிஸிபல் கவுன்ஸிலர் ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டார்.

* *

எல்லா இந்தியத் தபால் மகாநாடு அடுத்த செப்டம்பர் மாதத்தில் 24, 25, 26-ந்தேதிகளில் நடைபெறும். கனம் கபர்தே (திலகரின்தோழர்) அக்கிராசனராக விருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

தஞ்சாவூர் ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் 2-வது மகா நாடு.

அக்கிராசனாதிபதியவர்களின் பிரசங்கம்.

(சென்றவார போதினியின் தொடர்ச்சி.)

கர்ணங்களின் நிலை.

இனி, கர்ணங்கள் முதலிய கிராம நவுக்கர்கள் எவ்வித நிலைமையில் இருந்து வருகிறார்களென்பதைக் கவனிப்போம். கர்ணங்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் வித்தியாசமுண்டு. பிரிட்டிஷாரின் ஆட்சி இந்த தேசத்தில் ஏற்பட்ட பிறகு ராஜாங்கக் கணக்குகளை வைத்திருப்பதற்காக இப்பொழுதிருக்கிற ஹோதாவில் கர்ணங்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். எக்காலத்திலும் அவர்கள் கௌரவ உத்தியோகஸ்தர்களாக பாவிக்கப்பட்டதில்லை. ராஜாங்கத்தாரிடம் சம்பளத்துக்கு வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள்களாகவே அவர்கள் எப்பொழுதும் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்கிருந்து வரும் சம்பள திட்டத்தை ராஜாங்கத்தார் ஏற்படுத்துவதற்கு முன், அவர்களுக்கு இரண்டு வழிகளில் வருமானமிருந்து வந்தது. கவர்ன்மெண்டார் தங்களுக்காக கணக்குகளை வைத்திருப்பதற்கு அவர்களுக்கு ஊதியம் கொடுத்துவந்தார்கள். ஆதியில் இருந்துவந்த குடிக்கர்ணங்களின் வார்சுகளாக அவர்கள் தங்களுடைய முன்னோர்கள் வைத்திருந்த கணக்குகளை எழுதி வருவதற்காக மிராசுதார்களிடமிருந்தும் அவர்களுக்கு வருமானமிருந்தது. 1820ம் வருஷத்திற்கு முன் அவர்களுக்கு கவர்ன்மெண்டாரிடமிருந்து கிடைத்த சம்பளமானது அவர்களுடைய வருமானத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. இதற்காக நமது ஜில்லா நில வருமானத்திலிருந்து ஒரு லட்சரூபாயை கவர்ன்மெண்டார் ஒதுக்கி வைத்து அவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். ஆதியிலிருந்து குடிக் கர்ணங்களுக்கு மிராசுதார்களுடைய தானியத்திலிருந்து கிடைத்துவந்த வீதாசாரத்தை இவர்களும் அடைந்து வந்தார்கள். இவ்விதம் அவர்களுக்கு இருந்து வந்த இரு வகை வருமானத்தை கவர்ன்மெண்டார் 1820-ம் வருஷத்தில் ஒன்று படுத்தி அவர்களுக்கு மாதச் சம்பளத்தை ஏற்படுத்தினார்கள். அந்தக் காலத்திற்குப் பிறகு அவரவர்களுடைய சம்பளம் காலத்திற்கேற்றபடி சரியாகப் போதியவளவு உயர்த்தப்படவே இல்லை. கவர்ன்மெண்டார் மறு பைசல் மூலமாக தங்களுடைய வருமானத்தை வெகுவாக உயர்த்தியிருப்பினும், அதனுடன் கூட கிராம நவுக்கர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டிய அவசியத்தை அவர்கள் கவனிக்காமலே இருந்துவிட்டார்கள். ஆதியில் கர்ணங்களுக்குக் கொடுபட்டு வந்த சம்பள விகிதங்கள் என்ன வென்றும் இப்பால் அவைகள் எவ்விதம் மாற்றப்பெற்றிருக்கின்றனவென்றும், அந்த உயர்வானது போதியதல்லவென்றும் நான் மேலே வியக்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சமீபத்தில் அவர்களுக்குக் கொடுபட்டிருக்கும் சம்பள உயர்வும் அவர்களுடைய வேலைக்குப் போதிய ஊதியமுமன்று; அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றவும் இந்த உயர்வு போதாது. கிராம முன்சீப்புகளை ஆதியில் கௌரவ உத்தியோகஸ்தர்களாக வைத்திருக்கச் செய்யப்பட்ட முயற்சிகள் பலனற்றுப் போயிருப்பதிலிருந்தும், இப்பொழுது ரூபாய்க்கு பண்டங்களை வாங்கும் சக்தி குறைந்திருப்பதிலிருந்தும், உலகம் முழுவதிலும், இந்தியாவிலும் எல்லோருக்கும் ஊதியங்கள் உயர்த்தப்பட்டிருப்பதிலிருந்தும், கிராம முன்சிப்புகளுக்கு நியாயமாக அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டிய அவசியம் மேற்பட்டிருக்க, கர்ணங்களும் இதர கிராம நவுக்கர்களும் அதிகச் சம்பளம் கேட்பதற்கு வேறு விதத்தில் பாத்தியமிருக்கிறது. கிராம மகசூலிலிருந்து ஒரு வீதாசாரம் அவர்களுக்கு ஏற்கெனவே கிடைத்து வந்திருக்கிறது. அந்த வீதாசாரம் இப்பொழுதும் அவர்களுக்குக் கிடைத்து வருமானால், அவர்கள் இப்பொழுது தங்களுடைய விஞ்ஞாபனங்களில் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் சம்பள உயர்வைவிட அதிகமான வருவாயே அவர்களுக்குக் கிடைத்து வரும். ஆதியில் கிராம நவுக்கர்களுக்கு கீழ்க்கண்டபடி மர மூலமாக சுவதந்தரங்களிலிருந்து வந்தன:—

100 கலம் மொத்த மகசூலில்

		கலம்.	மரக்கால்.
1.	கரணம்	0	2
2.	தலையாரி	0	2
3.	பட்டிக்காரன்	0	1
4.	வைத்தியன்	0	1
5.	வண்ணான்	0	1
6.	பரியாரி	0	1
7.	ஏழை ஜனங்கள்	0	6
8.	காவல் அல்லது போலீஸ்	0	8
9.	அறுப்புக்கூலி	4	2
10.	களவடி	3	0
	ஆக.	9	0

பாக்கி 91 கலத்தில்

		கலம்.	மரக்கால்.
1.	தலையாரி	0	4
2.	நீராணிக்கம்	0	2
3.	வெட்டியான்	0	4
4.	தச்சன்	0	3
5.	கொல்லன்	0	3
6.	ஆலயங்களுக் பிராமணர்களுக்கும்	0	8
7.	காவல் அல்லது போலீஸ்	1	0
	ஆக.	3	0

இவ்விதமாக ஆதி காலத்தில் இருந்தவந்த சுதந்திரம், வீதாசார வருமானம் முதலிய பொதுச் செலவுகளை எவ்விதம் கவர்ன்மெண்டார் மாற்ற ஆரம்பித்து ஸ்வதந்திரதார்களுக்கும் வழி பண்ணி, மிராசுதார்களிடம் அப்போதைக்கப்போது செய்துவந்த செட்டில்மெண்டு காலங்களில் தங்களுக்கும் வழி பண்ணிக்கொண்டார்களென்பதைப் பற்றி தஞ்சாவூர் ஜில்லா மான்யூவில் ருசிகரமான விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அம்சத்தைப்பற்றி மற்றொருசந்தர்ப்பத்தில் விஸ்தாரமாகச் சொல்ல உத்தேசித்திருக்கின்றேன். கவர்ன்மெண்டார்கிராம உத்யோகஸ்தர்களிடம் நடந்துவரும் முறைமை அநியாயமும் சுருக்கமாக கர்ணங்களின் தலையில் அதிக வேலைகளையும் விசேஷப் பொறுப்புகளையும் சுமத்திவிட்டு, இந்த ஏழை உத்தியோக வருக்கத்தின் ஸ்வதந்திரங்களைப் பிடுங்கிக்கொண்டு வேலைக்கு வேண்டிய பேர்வழிகள் அகப்படுகிறார்களென்று கவர்ன்மெண்டார் பெருமை சொல்லுவதின் கருத்தை நான் அறிந்து கொள்ளக்கூடவில்லை.

இவ்விதம் உங்களுக்குள்ள கிரமமான பாத்தியங்களுக்குக் கவர்ன்மெண்டார் என்ன சமாதானம் சொல்லுகிறார்கள் என்பதைக்கவனிப்போம். அப்போதைக்கப்போது அவர்கள் சமயத்துக்குத் தகுந்தபடி ஒன்றுக்கொன்றொவ் வாத சமாதானங்களைச் சொல்லி வருகிறார்கள். உங்களுடைய பிரதிநிதிகள் அதிகாரிகளை நேரில் கண்டு உங்களுடைய குறைகளைத் தெரிவித்துக்கொண்டதிலிருந்தும், அப்போதைக்கப்போது விஞ்ஞாபனங்கள் மூலமாக நீங்கள் உங்களுடைய கஷ்டங்களை அவர்களுக்கு அறிவுறுத்தியதிலிருந்தும், அவர்களுடைய கண் திறந்திருக்குமென்றே நான் நம்புகிறேன். சமீபத்தில் நடந்த சட்ட சபைக் கூட்டத்தில் கனம் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் இந்த விஷயத்தில் அனுதாபமில்லாதிருந்ததைக்கண்டு எனக்கு மிகுந்த துக்கமும் ஆச்சரியமுமுண்டாயிற்று. கிராம உத்தியோகஸ்தர்களுடைய கஷ்டங்கள் அவருக்கு நேரில் நன்றாகத் தெரிந்திருக்கையில், அவர் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பேசி ஓட் கொடுத்திருக்கலாம். இன்னும் சில உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்களும் உங்களுக்கு நியாயம் வழங்க மறுத்தது எனக்கு ஆச்சரியமாகத் தானிருக்கிறது.

உங்களுக்குப் போதிய சம்பளம், கௌரவமான வாழ்வு, திருப்திகரமான வேலை நிபந்தனைகள் முதலியன ஏற்படுவதற்கு நீங்கள் இப்பொழுது முயற்சி செய்து வருவதுடன், இனி கிராம வாழ்வை எவ்விதம் திருத்தி, கிராம வேலைகளை பஞ்சாயத்துகள் மூலமாக நடைபெறும்படி செய்யலாமென்பதைப்பற்றி யோசித்து வரும் தலைவர்களுடன் நீங்கள் கலந்துகொண்டு ஒழுங்கான ஏற்பாடுகளைச் செய்து முடிக்க நீங்கள் உதவியாயிருக்கவேண்டும். கிராமக் கோர்ட்டுகளும் கிராமப் பஞ்சாயத்துகளும் உண்மையான ஜன நாயக முறைப்படி ஏற்படுவதாயின், கிராம வாழ்வானது சகல விஷயங்களிலும் திருப்திகரமாக அமைத்து பஞ்சாயத்துகளைக் கொண்டு சகல வேலைகளையும் ஒழுங்காக நீங்கள் நடத்தி வர வேண்டுமாயின், பஞ்சாயித்துகளுக்கு அந்த வேலைகளைச் செய்து வர போதிய அதிகாரமும் ஆதாய மூலமும் ஏற்படும்படியான வழியைத் தேடவேண்டும். நீண்டகாலமாக கிராம வேலைகளை சிறப்பாக நடத்தி வந்திருக்கும் நீங்களும் இப்பொழுது கிராம சமூகத்தில் ஈடு பட்டுவிட இஷ்டமுள்ளவர்களாகவே இருப்பீர்களென்றே நம்புகிறேன். அவ்வித நிலைமை ஏற்படுவதற்கு உங்களுக்கு உத்தியோகத்தை ஒட்டி மான்யங்களை விட்டு, அவைகளைப் பிடுங்கிக்கொள்ளும் அதிகாரத்தை கவர்ன்மெண்டிடம் விடாமல் கிராம ஸ்தாபனத்தினிடமே விட்டு வைத்து, உங்களைக் கிராம வாழ்வில் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்களாகச் செய்துவிடலாம். அவ்விதம் செய்துவிடின் அடிக்கடி உங்களுடைய சம்பளத்தை உயர்த்தும் விஷயத்தைக் கவனிக்கும் அவசியமும் இல்லாமற் போய்விடும். அதிகாரி வர்க்கத்தினரின் ஆட்சி முறையால் கிராம வாழ்விலிருந்து நீங்கள் பிரிந்து நிற்கும் முறையும் மாறிவிடும். இந்த விஷயத்தைப் பற்றி முடிவான யோசனைகள் செய்யப்பட வேண்டியிருக்கும் காலத்தில் உங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொள்ளுவதற்காக நீங்கள் இப்பொழுது முதலே தீர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அவ்வித ஏற்பாடு அனுஷ்டானத்திற்கு வரும் வரையில் உங்களுடைய காலக்ஷேபத்திற்குக் கட்டும்படியான சம்பளம் கொடுபடவேண்டியதவசியம்.

தஞ்சை ஜில்லா மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

11-ம் தேதி பத்திரிகையின் தொடர்ச்சி

இம்மாதம் 7, 8ந் தேதிகளில் பாபநாசத்தில் கூடிய தஞ்சைஜில்லா மகாநாட்டில் மொத்தம் 51 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அவைகளில் சில வற்றை 11ந்தேதி வாரப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். மற்றவைகளைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்.

மறு செட்டில்மெண்டு

(1) அரசியல் திருத்தச் சட்டத்தைச் பரிசீலனை செய்ய பார்லிமெண்டு கலப்புக் கமிட்டியார் செய்திருக்கும் சிபாரசுகளை அனுசரித்து நிலத்தீர்வையை விதித்து வசூலிக்கும் முறையைத் திருத்துவதற்கான சட்டத்தை புதிய சட்டசபைகள் அமைக்கப்படும் வரையில் நிறைவேற்றுவதற்காகக் கொண்டு வரக் கூடாதென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(2) அவவிதச் சட்டம் இயற்றப்படும் வரையில் இப்பொழுது நடந்துவரும் செட்டில்மெண்டு வேலைகளை நிறுத்திவைக்க வேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(3) மிராசுதார்களுடைய பாத்தியதைகளுக்கும பூரண பாதுகாப்புகள் ஏற்படும்படி எவ்விதம் சட்டத்தை இயற்றவேண்டுமென்றும் பரிசீலனை செய்து ரிபோர்டு செய்வதற்காக மெஸர்ஸ் கே. சிதம்பரநாத முதலியார், எஸ். ரெத்தினம் பிள்ளை, கனம் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார், ராவ் சாகிப் வி. ஆர். லக்ஷ்மிவாராகய்யங்கார், ராவ்பகதூர் வி. அப்பாசாமி வாண்டையார், ராவ்பகதூர் அண்ணுசாமி தேவர், சடகோப முதலியார், வி. மகாதேவய்யர், ராமய்யா நாயுடு, ராவ்பகதூர் என். கிருஷ்ணஸ்வாமியய்யங்கார் இவர்களடங்கிய கமிட்டியொன்றை நியமனம் செய்கிறது.

(4) இந்த வேண்டுகோளுக்கு விசேஷமாக கவர்ன்மெண்டார் மறுபைசல் வேலைகளைச்செய்து கொண்டுவரத் தீர்மானிப்பார்களாயின் சட்ட சபையிலுள்ள ஜனப்பிரதிநிதிகளின் சம்மதமன்னியில் விதிக்கப்படும் அதிகத் தீர்வையை மிராசுதார்கள் கொடுக்காமலிருக்கும்படி செய்யப் பலத்த பிரசார வேலை செய்வது இந்த ஜில்லா மகாஜனங்களின் கடமையாகுமென்று இநத மகாநாடு வற்புறுத்துகிறது.

கண்ணம்பாடி அணை.

(எ) கண்ணம்பாடி அணைத்தகாறு இப்பொழுதிருந்து வரும நிலைமையை அறிவதற்கும் இனி இது சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் மிராசுதார்களின் பாத்தியங்களுக்கும் சுதந்திரங்களுக்கும் ஏற்றவாறு எடுத்துக்கொள்ளப் படும்படிக்கும தஞ்சை டெபுடேஷனொன்றை வரவேற்றுப் பேசவேண்டு மென்று மேன்மைதங்கிய கவர்னரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

இவ்விரண்டு ஜில்லா மிராசுதார்களும்தங்களுடைய பாத்தியதைகளை அடைவதற்கு அனுகூலமாயிருக்கும் இந்தியா மந்திரியின் யாதாஸ்தையும். சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளையும் பிரசுரிக்க வேண்டுமென்று இந்த மகாநாடு கேட்டுகொள்ளுகிறது.

ரெயில்வே குறைகள்.

(ஏ) இப்பொழுது தஞ்சை ஜில்லாபோர்டு ரெயில்வே நிர்வாகத்தில் ஏற்படும் கஷ்டங்களையும் அசவுகரியங்களையும் நிவர்த்திப்பதற்காக இனியாவது தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாருக்குச் சொந்தமான தஞ்சாவூர் நாகூர் ரெயில்பாதையை ஜில்லா போர்டார் தங்களுக்கு சொந்தமாகச் செய்து கொள்ள வேண்டு மென்று இந்த கான்பரென்ஸ் அபிபிராயப்பட்டு அது விஷயமாக கவர்ன்மெண்டாருடன் உடனே ஏற்பாடுசெய்ய ஆரம்பிக்கும்படி ஜில்லாபோர்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(பி) வேதாரணியம் ரயில்பதையை கோடிக்கரை வரையில் நீட்டி விட வேண்டுமென்று இந்தக்கான்பரன்ஸ் வற்புறுத்துகிறது.

(ஸி) திருவாரூருக்கும் அறந்தாங்கிக்கும் மத்தியில் போதிய வண்டிகள் விடப்படாததால் பட்டுக்கோட்டை அறந்தாங்கி வாசிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் அசவுகரியங்களையும் மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுவதுடன், இப்பொழுது கிடைத்துவரும் வருமானத்திலிருந்து அதிக வண்டி விடவழியில்லை யென்று தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் சொல்லியிருப்பதைப்பலமாக ஆட்சேபிக்கிறார்கள். மேலும் ஜில்லா போர்டுக்கும் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனிக்கும் இனி இருந்து வர வேண்டிய சம்பந்த விஷயமாக உடனே ஒரு முடிவு செய்துவிட வேண்டுமென்றும் ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

(டி) திருவாரூர்: திருத்துறைப் பூண்டி ஸ்டேஷனிலுள்ள மாடிகளுக்கு இது வரையிலும் மூடிபோடாததைக் கண்டும திருவாரூர், நீடாமங்கலம், மன்னார்குடி முதலிய இடங்களில் தங்குமிடங்களில்லாததைக் கண்டும இந்தக் கான்பரென்ஸ் வருந்துகிறது.

(இ) கும்பகோணம்—நீடாமங்கலம், மன்னார்குடி—திருத்துரைப்பூண்டி, தஞ்சாவூர்—திருவாதி, மாயவரம்—தரங்கம்பாடி ரெயில்பாதை வேலைகளை சீக்கிரம் எடுத்துக்கொண்டு விட வெண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(எப்) ஜில்லா போர்டார் தங்களுக்குச் சொந்தமான ரெயில்பாதைகளைத் தாங்களே நிர்வகித்து வரவேண்டிய காலம் வந்துவிட்டதென்று இந்த கான்பரென்ஸ் அபிப்பிராயப்பட்டு, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும்படி ஜில்லா போர்டையும் கவர்ன்மெண்டையும் கேட்டுக்கொள்ளுகிறது.

(ஜி) தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் கட்டணங்களை உயர்த்தியிருப்பதை இந்த மகாநாடு பலமாக ஆட்சேபிக்கிறது. ஜில்லா போர்டு லயனில் யாத்திரை செய்பவர்களிடமும் மெயில் கட்டணங்களை கம்பெனியார் வசூலிப்பதை இந்த மாகாநாடு ஆட்சேபிக்கிறது.

இதர தீர்மானங்கள்

காங்கரஸ் மகாசபை செய்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து எங்கும் தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், சட்டசபையில் அவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டு மென்றும், தொழிலாளர் விஷயத்தில் அனுபவமில்லாத ஒரு வரைத் தலைவராகத் தொழிலாளர் சமிட்டிக்கு நியமித்தது கண்டிக்கக் கூடியதென்றும், தீர்மானம் செய்யப்பட்டது. ஜீவாதாரமான சுதந்தரங்கள், அடக்குமுறைச் சட்டங்கள், அரசியல் விதிகள் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் விஷயம் பஞ்சாப் பெருவதை வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம எலக்ஷன் தீர்மானம், முதலிய தீர்மானங்கள் திருநெல்வேலி மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களை அனுசரித்துச் செய்யப்பட்டன.

ஆயுர்வேத யுநானி முறைகளை ஆதரிக்க வேண்டு மென்றும், ஜில்லா போர்டும் கவர்ன்மெண்டும் அம்முறைகளைக் கற்பிக்கும் பல சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும், மெலட்டூரில் ஒரு சப்ரிஜிஸ்தரா பீஸ் ஏற்படுத்த வெண்டுமென்றும், பிரதி தாலூகாவிற்கும் தாலூக்கா போர்டு ஏற்படுத்த வேண்டுமென்றும், ரெயில்வேக்களில் சாமான்களைப் போக்குவரத்து செய்வதிலுள்ள அசவுகரியங்களை நிவர்த்தி செய்து விலோனுடன் வியாபாரம் செய்து வருவதில் இருந்துவரும் நிர்ப்பந்தங்களை அகற்ற வேண்டுமென்றும், தென் ஜில்லாக்களிலுள்ள வர்த்தகர்களுக்குச் சட்ட சபையில் ஒரு ஸ்தானம் ஒதுக்கிவைக்க வேண்டுமென்றும், மல்லியத்திற்குக் கிழக்கே காவிரியாற்றைவெட்ட வேண்டுமென்றும், மேய்ச்சல் தரைகளைபோதியவளவு ஏற்படுத்தி காட்டிலாக விதிகளைத் தளர்த்த வேண்டுமென்றும், அறைகுறையான சர்வே நம்பர்களில் அழிகால்சாவி ஏற்பட்டாலும் கிஸ்தியைவஜா செய்து தரவேண்டுமென்றும், கிராமங்கள் தோறும் சமுதாய நிலங்களிலிருந்து மேய்ச்சலுக்குப் போதிய நிலங்களை ஒதுக்கிவைக்க வேண்டு மென்றும், அவசியமான இடங்களில் நிலங்களை வாங்கி மேய்ச்சல் தரையாகவிடவேண்டு மென்றும், கிராமாந்தரங்களில் கால்நடைகளுக்குக் குடிதண்ணீருக்குவழி பண்ண வேண்டுமென்றும், இயற்கையாக வளரும் பயிர்களுக்காகவும் தண்டத்தீர்வை விதிப்பதை விட்டுவிட வேண்டுமென்றும், புறம்போக்கு நிலங்களில் மரங்களைப் பயிரிட விவசாயிகளுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும், கால்நடைகளைக் காடுகளில்மேய்த்துக் கொள்ள அனுமதி தரவேண்டுமென்றும், இந்த ஜில்லாவிலுள்ள துறைமுகங்களை மறுபடியும்திறந்து யாழ்பாணத்திற்கும் கோடிக்கரைக்கும்பிரயாணிகளின்போக்குவரத்தைஏற்படுத்தவிலோன்கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும், சம்பளக் கமிட்டியாரின் சிபார்சுகளை அனுசரித்து ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலிருந்து வரும் ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர் களுக்கும் சம்பளம் கொடுத்து வரும்படி உத்தரவிட வேண்டுமென்றும், தேர்ச்சி பெறாத உபாத்தியாயர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ 120 ம், லோயர் எலிமெண்டரி பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ 180 ம உயர்ந்தது. எலிமெண்டரி பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களுக்கு ரூ 240 ம், ஸ்கூல் பைனல் டிரெயினிங் பெற்றவர்களுக்கு ரூ 300 ம் கிராண்டாகக் கிடைக்கும்படி கவர்ன்மெண்டு பொருளுதவி செய்யும் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும், கல்வி இலாகா சட்டத்தில் மதப்படிப்பு விஷயமான விதியைப் புகவிட வேண்டுமென்றும், ஸ்டாம்பு வெண்டர்களின் டிஸ்கவுண்டை அதிகப்படுத்த வேண்டுமென்றும், மகாமக காலத்தில் பொதுஜன சேவை செய்ய சமூக ஊழியப் படையை ஏற்படுத்த ஒரு கமிட்டியை நியமிப்பதாகவும், அதில் சேரும் மாணவர்களுக்கு பரிட்சை கஷ்டம் நேராதபடி பரிட்சை காலத்தை ஒத்திவைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுவதாகவும், கவர்ன்மெண்டாரும் இந்தக் கமிட்டியுடன் ஒற்றுழைத்து தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், ஹிந்தி பாஷையை இந்த ஜில்லாவில் பிரசாரம் செய்ய வேண்டுமென்றும், தாய் மொழியாகிய தமிழை ஆறுவது பாரம் வரையில் சட்டாய பாடமாக ஏற்படுத்த வேண்டுமென்றும், ஆங்கில பாடம் தவிர மற்றப் பாடங்களை ஆறுவதுபாரம் வரையில்தமிழிலேயே கற்பிக்க வேண்டுமென்றும், வடமொழி அராபிக் பாஷைகளைப்போலவே தமிழையும் உயர்தனிச்செம் மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்றும், சௌராஷ்டிரர்களை அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக பிராமணரல்லாதவர்களென்று சொல்ல கவர்ன்மெண்டுக்கு அருகதையில்லையென்றும் கவர்ன்மெண்டார் பஞ்சமர்களுக்கு மனைக் கட்டுகள் வாங்கிக் கொடுத்து அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதில் மிராசுதாரர்களுக்கு ஆட்சேபமில்லை யாயினும், மிராசுதாரர்களுக்குப் பாதகமான காரியத்தைச் செய்யக் கூடாதென்றும், வீடுபுறக் கடைகளிலும் மனைக்கட்டுகளிலும் செய்யப்படும் சாகுபடிகளுக்குத் தீர்வை விதிக்கப்படுவது நியாயமல்ல வென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. அடுத்த மகாநாடு மன்னார்குடியில் கூடும்.

உலக அரசியல் நிலை.

தீர்க்கதரிசி எழுதுகிறார்.

ஒரு வேண்டுகோள்.

நண்பர்களே! என்னை மன்னிக்கவும். இரண்டு வாரங்களாக நான் உங்கள் முன்பு தலைகாட்ட முடியவில்லை. காரணம் பாபநாசத்தில் கூடிய ஜில்லா கான்பரன்ஸின் நடவடிக்கைகளாகும். இனி நான் பிரதிவாரம்தோறும் உங்களுக்கு உலக அரசியல் நிலையைப்பற்றித் தொகுத்துச்சுருக்கமாக எழுதவேண்டுமானால், நீங்கள் என்பொருட்டு ஒரு நல்ல காரியம் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் ருசியுள்ளவர்கள்—ருசியில்லாதவர்கள் இடையாதென்பது நிச்சயம்—பத்திராதிபருக்கு ஒரு கடிதம் எழுதி எந்த விஷயம் எப்படியிருந்தாலும் ஒரு பத்தியாவது தீர்க்கதரிசி உலக அரசியலைப் பற்றி எழுதியனுப்புபவைகளைப் பிரசுரிக்கவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்வார்களென்று நம்புகிறேன். இது போகட்டும்.

நெருக்கடியான நிலை.

வாயுவேகம் மனோவேகமென்று சொல்லலாம் அவ்வளவு துரிதமாக ஐரோப்பாவில் திடுக்கிடும்படியான சம்பவங்கள் ஏற்பட்டு வருகின்றன. தினப்பத்திரிகைகளில் மூலைக்கு ஒரு விஷயமாக மனம் குழப்பமடையும்படி ஐரோப்பா செய்திகள் வெளியிடப்படுகின்றன. எல்லாவற்றையும் ஒருங்காத்திரட்டிப் படித்துப்பார்த்தால், இந்தியர்கள் உலக நிகழ்ச்சிகளை உற்றுக் கவனிக்கவேண்டுவது அவசியமென்று தோன்றும். உலக நிகழ்ச்சிகளுக்கும் இந்தியாவுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது; நம்மவர்கள் ஏன் அவைகளைக் கவனிக்கவேண்டுமென்று ஒருவர் கேட்டல் அவர் மூன்றாம் பசலி ஆசாமியென்று தள்ளிவிடவேண்டும். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உலக நிகழ்ச்சிகள் ஒரு பாடமாகவிருக்கின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சம்பந்தம் நமக்குப் பாக்கியவசமாகக் கிடைத்திருப்பதால், பிரிட்டிஷாருக்குட்பட்ட நாடுகள் உலகெங்குமிருப்பதால் உலகத்துத் தேசங்களில் நிகழும் சம்பவங்களை நமது தேச முன்னேற்றத்திற்கு நாம் கவனித்துக்கொண்டிருக்கவேண்டும்.

மற்றொரு யுத்தம்.

ஐரோப்பாவின் வடகிழக்குப் பாகத்திலுள்ள ருஷ்யாவில் இன்னும் அமைதி ஏற்படவில்லை. அங்குள்ள போல்ஷிவிக்கர்கள் உலகெங்கும் மாயவலைவீசி தங்களுடைய கொள்கைகளைப் பரப்ப எத்தனித்துவருகிறார்கள். போலந்துக்கும் ருஷ்யாவுக்கும சண்டை நடந்துவருகிறது. போல்ஷிவிக்கர்கள் முன்சென்று வருகிறார்கள். போலந்தின் பிரதான தலைநகரமான வார்ஸாபட்டணம் சத்துருக்கள் கையில் வசப்பட்டுவிடுமென்று நேசக்கட்சியார்கள்கூட எதிர்பார்த்தார்கள். ஆனால், இன்றுவரையில் (24—8—20) அதைப்பற்றிய கெட்ட செய்தியொன்றும் வரவில்லை. எனினும் கவலைகொள்ளாமலிருக்க முடியவில்லை.

பிரிட்டிஷாரின் போக்கு.

பார்லிமெண்டின்கூட்டம் அக்டோபர் மாதம் 19ந்தேதி தள்ளிவைக்கப்படவேண்டுமென்று மிஸ்டர் போனர்லா என்பவர் கவர்ன்மெண்ட் தரப்பில் ஒரு பிரேரபணைகொண்டுவந்து பேசியபோது, பிரிட்டிஷாரின் ஏகாதிபத்திய போக்கை நன்றாக விவரித்துக்கூறினார். "ருஷ்யாவுக்கு விரோதமாகப் பிரிட்டிஷார் துருப்புகளை அனுப்பி போலந்தியர்களுக்கு உதவிசெய்தால் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் தேசமெங்கும் வேலை நிறுத்தத்தை உண்டாக்கிக் கவர்ன்மெண்டின் காரியம் பயனில்லாமற் செய்வர்" என்று பிரிட்டிஷ் தொழில் தலைவர்கள் தீர்மானம்செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியதைப்பற்றி மிஸ்டர் போனர்லா கண்டித்துப்பேசினார். கவர்ன்மெண்டார் பார்லிமெண்டின் உத்திரவின்றியும், பிரிட்டிஷ் பொது ஜனங்களின் ஆதரவின்றியும் ருஷ்யா மீது இராணுவப் பிரயோகங்கள் ஒன்றும் செய்யப்படமாட்டாவென மிஸ்டர் போனர்லா உறுதிகூறினார். மிஸ்டர் லாயிட்ஜார்ஜும் மிஸ்டர் போனர்லாபேசியதை வற்புறுத்தித் தொழிலாளர்கள் செய்த தீர்மானம் கண்டிக்கக்கூடியதென்றும், இவ்வாறு சொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்றும் எச்சரிக்கை செய்தார். இவர்கள் என்ன சொல்லியும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர்கள் தங்களுடைய தீர்மானத்தில் ஒரே பிடிவாதமாயிருக்கிறார்கள். இக்கொள்கையுடைய பிரதிநிதிகள் பிரான்ஸுக்குச் சென்றபோது அவர்கள் பிரஞ்சு நாட்டை விட்டுப்போய்விடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டதாகத் தெரிகிறது. ருஷ்யா போலந்து விஷயம் போகப்போகத் தெரியும்.

அயர்லாந்து.

இந்த நாட்டின் பரிதாப நிலையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லத்தேவையில்லை. இந்நாட்டு ஜனங்களுடைய நிலை நித்தியகண்டம் பூரணாயுசாகவிருக்கிறது. கொலைகளும் அராஜமும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. ஸின்பீனர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அடக்குமுறைகளுக்குப் பயப்படுவதாகத் தெரியவில்லை. பிரதம மந்திரி மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் தாம் அயர்லாந்துக்குச் சுயஆட்சிகொடுக்கத் தயாராயிருப்பதாகவும், இது விஷயமாக யாரேனும பேசவந்தாலும் அவரோடு கலந்து யோசிக்கத்தயாராயிருப்பதாகவும் சொல்லுகிறார். ஸின்பீனர்கள் ஒரே பிடிவாதமாக பிரிட்டிஷ் சம்பந்தத்தை அடியோடு வேரறுத்துவிட்டு அயர்லாந்தில் குடியரசு ஏற்படுத்தவேண்டுமென்று துடியாயிருக்கிறார்கள்.

மெஸபொத்தேமியா.

சமாதான உடன்படிக்கை பிரகாரம் சர்வதேசச் சங்கத்தின் உத்தரவுபெற்று பிரிட்டிஷார் மெஸப்பொதேமியாவை ஆட்சிபுரியத்தொடங்கினர். சொற்பகாலத்திற்குள் அங்குள்ள அராபியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிமுறையில் அதிருப்தியடைந்துவிட்டனரென்று மிஸ்டர் லாரன் ஸமித் 'டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு வியாசமெழுதினார். இந்தக் காரணத்தைக்கொண்டோ அல்லது வேறு எக்காரணத்தைக்கொண்டோ மெஸபொதேமியாவில் கலகங்கள் ஏற்பட்டு இன்னும் அடங்காமலிருக்கின்றன. பாக்தாதின் வடமேற்கிலும் வடகிழக்கிலும் பெரிய கலகங்களுண்டாயிருக்கின்றன. அந்த நகரத்தைச்சுற்றி அராபியக் கலகக்காரர்கள்சூழ்ந்துகொண்டார்களென்று சொல்லப்படுகிறது. இம்மாதம் 12ந்தேதி லெப்டினன்ட் கர்னல் லீக்மான் என்னும் அரசாங்கஉத்தியோகஸ்தர் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கிறார். இதற்குக்காரணமென்னவென்று தெரியவில்லை. லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை மெஸப்பொத்தேமியா விஷயமாகப் பிரிட்டிஷார் கொண்டிருக்கும் கொள்கையும், அதை அனுசரிக்கிற வழிகளும் அடியோடு மாற்றப்படவேண்டுமென்று கூக்குரலிடுகிறது. இப்போது மெஸப்பொத்தேமியாவில் செலவழிக்கப்பட்ட பணத்தை வேறு நல்ல காரியத்திற்கு செலவழித்திருக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறது. இந்தச் செலவை இந்தியர் வகிக்கவேண்டுமென்று வதந்தி உலவுகிறது. இஃதுண்மையானால் இந்தியர்கள் நிமிர்ந்து நின்று மறுதளிக்கவேண்டும்.

ஜப்பானின் வியாபார முயற்சி,

ஊர் இரண்டுபட்டிருக்கக் கூத்தாடிக்கு லாபம் என்று சொல்லுவதற்கொப்பாக ஜப்பான் அரசாங்க பலத்தை முற்கொண்டு இந்தியா, ஸிலோன், சீனா, திபேத் முதலியவிடங்களில் தன்னுடைய வியாபாரப் பொருள்களைக்கொண்டுபோய் கொட்டி ஒன்றிற்கு மூன்று அல்லது நான்குமடங்கு வீதம் லாபத்தை அள்ளிக்கொண்டுபோகிறது. சீனாவில் மாத்திரம் ஜப்பான் வியாபாரம், அங்குக்கலகம் ஏற்பட்டு அமைதி ஏற்படவில்லையாகையால், கொஞ்சம் தடைபட்டு நிற்கிறது.

கிலாபத் குறிப்புகள்.

சென்னை நகரில் முஸ்லிம் மாணவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் மதராஸ் இஅஸாம் என்னும் பள்ளிக்கூடத்தின் அதிகாரிகள் அப்பள்ளிக்கூட முஸ்லிம் மாணவர்கள் வாலண்டியர் படையில் சேரக்கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறார்களென்று தெரிகிறது. இவ்வுத்திரவு ஒரு முஸல்மான் கையெழுத்துப்போட்டு வெளியானதைக் குறித்து இந்துக்களும் முஸ்லிம்களும் வருந்துகிறார்கள்.

* *

இம்மாதம் 12ந் தேதி முதற்கொண்டு இந்தியாவினின்று முஸ்லிம்கள் ஹிஜரத் செய்யக்கூடாதென்று ஆப்கன் அமீர் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிறார்.

* *

துருக்கிக்கு விதிக்கப்பட்டிருக்கும் சமாதான நிபந்தனைகளில் பெரும்பாலன அநியாயமானவைகளாகும். இதாலியிலும், பிரான்ஸிலும் இந்தச் சமாதான உடன்படிக்கையாருக்கும் பிடிக்கவில்லை. பிரதம மந்திரி மிஸ்டர் லாயிட்ஜார்ஜின் முயற்சியின்பேரில் துருக்கி சமாதான உடன்படிக்கைத் தயார் செய்யப்பட்டதால், அது தோற்றுப்போக வேண்டுமென்று இதாலியும் பிரான்ஸும் முயற்சிகள் செய்யும். அவைகளின் விஷமங்களையும் சூழ்ச்சிகளையும் நாமறிவோமென்று மிஸ்டர் வீவான்ட் பக்லடன் என்ற சரித்திர நிபுணர் "பாரின் அபேர்ஸ்" (அந்நியநாட்டு விஷயங்களடங்கிய பத்திரிகை) என்ற பத்திரிகையில் ஒரு சிறந்த வியாசம் எழுதியுள்ளார்.

* *

துருக்கி சமாதான உடன்படிக்கையைப்பற்றி முஸ்லிம்கள் அதிருப்திபடுவது நியாயந்தானென்று இவர் கூறுகிறார். யுத்தகாலத்தில் "சுய நிர்ணயம்" "சுதந்தரம்" என்று பேசப்பட்ட பேச்சுக்களை மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் மறந்து காரியங்களைச் செய்து வருகிறார். பிரிட்டிஷாருக்கு நியாய உணர்ச்சி உண்டென்பதை மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் கெடுத்துப்போட்டார். ஜாஸ்தியாய் முஸ்லிம்கள் பெருத்துள்ள ஸ்தலங்களைப் பிடுங்குவதற்கு "நாங்கள் யுத்தம் செய்யவில்லை" யென்று 1918ம் வருஷம் மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் சொல்லியபடியால், இவருடைய வார்த்தையை நம்பி முஸ்லிம்கள பிரிட்டிஷாருக்கு உதவி செய்தார்கள். இப்போது அவ்வுறுதிமொழிக்கு விரோதமாக காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. கிரீஸ்தேசத்தினருக்கு உதவி செய்துவருகிறார். இந்நிலைமையில் முஸ்லிம்கள் பிரிட்டிஷாரின் போக்கைக் கண்டு அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்.

* *

துருக்கி சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பிரிட்டிஷார் நிறைவேற்ற முடியாது; நிறைவேற்றிவைக்கவும் வழியில்லை. ருஷ்ய முஸ்லிம்கள் துருக்கியரோடு சேர்ந்துகொண்டாலும் கொள்வார்கள். கீழ் நாடுகளில் இனி பிரிட்டிஷார் சமாதானமாய் வாழமுடியாது. அந்த நிலைவை உடனே மனதினின்று நீக்கி விடவேண்டும். உடன்படிக்கைப்படி துருக்கிக்குச் சுயேச்சை அடியோடு போய்விட்டது. இனி பங்குபோட்டுக்கொள்வதில் இதாலியும், கிரீஸும் சண்டைபோட்டுக்கொள்ளும்போலிருக்கிறது. துருக்கியைத் தண்டிக்கப் பிரான்ஸ்கூட அவ்வளவு பிடிவாதமாயில்லை. பிரிட்டன் பிடிவாதமாயிருக்கிறது. ஆகையால் மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் சமரஸமாகப்போகவுள்ள வழிகளைத் தேடினால் மிகவும் நலமாயிருக்குமென்று இந்தச் சரித்திரநிபுணர் கூறுகிறார்.

சென்னைச் சட்டசபை

ருசிகரமான வாதம்

(நமது விசேஷ நிருபரிடமிருந்து)

சென்னை 22—8—20

சென்னைச் சட்டசபையின் கூட்டமொன்று எழும்பூர் விக்டோரியா பில்டிங்கில் லார்ட் வில்லிங்டன் அக்கிராசனத்தின் கீழ இம்மாதம் 17ந் தேதி கூடியது வழக்கம்போல் கோட்டையிலுள்ள சட்டசபைக் கட்டடத்தில் கூடவில்லை. காரணம் அது புதுசட்டசபைக்கு இடித்துக் கட்டப்படுகிறதாகும். கனம் அங்கத்தினர்களில் இரண்டொரு வர் தவிர மற்றவர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள். சபைகூடியதும், கனம் மிஸ்டர் ஸையத் பூசப்சாகிப் விஜயம் செய்வரோவென்று சிலர் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் தாம் முன் அறிவித்தபடி ஜனப்யாருப் ஹாவன் வழியைப் பின்பற்றிச் சட்டசபை ஸ்தானத்தை ராஜினாமா செய்துவிட்டார். இச்செய்கை சில விடங்களில் பாராட்டப்பட்டது. வேறு சில விடங்களில் பரிகாசமாகக் கொள்ளப்பட்டது. கடலூர் வாசியான திவான்பகதூர் எ. சுப்புராயலு ரெட்டியார் லோகல் போர்ட்ஸ் மசோதா விஷயத்தைப்பற்றி யோசனை கூறுவதற்காகவே ஒருமெம்பராக நியமிக்கப்பட்டார். இவர் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்தபிறகு சென்னை எலிமெண்டரி கல்விமசோதா, கல்வி இலாகாத் தலைவர் மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் ரஜாவிலிருப்பாதால் அடுத்த கூட்டத்தில் வாதிக்கப்படலாமென்று அறிவிக்கப்பட்டது.

வாடகையைக் கட்டுப்படுத்தும் மசோதா

சென்னை நகரில் வீட்டுக்காரர்கள் அநியாயமாக வீட்டுவாடகைகளை உயர்த்திக் குடியிருப்போர்களைத் தொந்திரவு செய்துவருவதினால், அதைத்தடுக்க வேண்டுமென்று கனம் மிஸ்டர் அருமைநாதன்என்பவர் ஒரு மசோதா கொண்டு வந்தார். மிஸ்டர் அருமைநாதன் இந்த மசோதா சட்டமாக்கப்பட வேண்டுமென்று கூறியகாரணங்கள் சிலாகிக்கத்தக்கன. இதன் அவசியத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். இந்தமசோதாவை ஆட்சேபித்தவர்களெல்லோரும் தனவந்தர்கள் கூட்டமாகையால் ஏழைகளுக்கு இதம் செய்யக்கூடிய மசோதாவை வேண்டுமென்றே தோற்கடித்து விட்டார்கள் கவர்ன்மெண்டார் இதில் பட்டுக்கொள்ளாமலிருந்தாலும், லார்ட் வில்லிங்டன் ஏழைகள் மீது இரக்கம்காட்டி மசோதா சார்பாகப்பேசுவரென்று எல்லோரும் எதிர்பார்த்தனர் ஆனால், லார்ட்வில்லிங்டன் முதலாளிகள் பேய்க்கூச்சலுக்கு இணங்கிவிட்டது வருந்தத்தக்கதென்று எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஏழைகளைக் காப்பற்றக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோமென்று கனம் ஸர். பி. தியாகராய செட்டியார் செய்த பட்டாடோபமெல்லாம் வெளிப்பட்டு விட்டன. ஜனங்கள் ஸர். பி. டி. செட்டியாரின் போக்கையும் லாட் கோவிந்தாவின் போக்கையும் நன்கறிந்து கொண்டுவிட்டார்கள்.

கிராமப் பஞ்சாய்த்து மசோதா

ஸர். பி. இராஜகோபாலாச் சாரியார். கிராமப்பஞ்சாயத்து மசோதாவைப் பிரேரபித்து, இதை எல்லா அங்கத்தினர்களாலும் வரவேற்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஸ்தல சுய ஆட்சிக்கு அடிப்படையாகவுள்ள இந்தக்கிராமப் பஞ்சாயத்து மசோதாவை, வேண்டப்பட்டபடியே அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றார்கள். இந்த மசோதாவில் பல அம்சங்கள் பிற்போக்கான கொள்கையுடையவை வாயிருப்பதால், ஸெலக்ட் கமிட்டியில் அங்கத்தினர்கள் தீர்க்காலோசனை செய்து கால நிலைக்கு ஏற்றபடி முற்போக்கான வழியில் திருத்தி அமைப்பார்களென்றுஎல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

சட்ட சபை முன்பு வாதிக்கப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவைகளைப்பற்றி மாத்திரம் இங்கு விவகரிக்கிறேன். கனம் சிவராவ் சென்னை நகரிலுள்ள கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிகளில் பணக்காரர்கள் பணம் செலவழித்து வைத்தியம் செய்து கொள்ளக்கூடியவர்களாயிருந்தால் அவர்கள் மேற்கண்ட ஆஸ்பத்திரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று கவர்ன்மெண்டார் பிறப்பித்துள்ள உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இவரும் இவரை ஆதரித்துப்பேசிய மற்றவர்களும் பணக்காரர்களாயிருந்தாலும் ஏழைகளாயிருந்தாலும் கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரிகளில் எல்லோரும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று ாதாடினார்கள். இவர்களிஷ்டம்போல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சந்தோஷம். ஸர்ஜன் ஜெனரல் கூறிய காரணங்களில் வரி கொடுப்போர்களெல்லோரும் ஸர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இடம் பெற உரிமையுடையவர்களல்லரென்று சொன்னார். ஜன நாயக ஆட்சி முறை எங்கணும் பரவிவரும் இக்காலத்தில் ஸர்ஜன் ஜெனரல் மூன்றும் பசலிக கொள்கையை எடுத்துரைத்தது எமக்கு விநோதமாயிருக்கிறது.

ஸ்திரீகளுக்கு விசேஷ சௌகரியங்கள்.

ஆங்காங்கு முனிஸிபாலிட்டி எலெக்ஷன் நடைபெறுங்காலத்தில் ஸ்திரீகளுக்கு முக்கியமாக கோஷா ஸ்திரீகளுக்கு விசேஷமான சௌகரியங்கள் செய்து அவர்கள் கஷ்டமன்னியில் வோட்டு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்ற பட்டது. கனம் அகமத் தம்பி மரைக்காயர் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமான வோட் கொடுக்குமிடம் இருக்க வேண்டு மென்பது உண்மையான விஷயம்.

நருடு செவிடு ஊமையர்கள்.

இவர்களுக்கு ஒரு பிரத்தியேகமான ஒரு பாடசாலை வைத்து நடத்த வேண்டுமென்று கனம் சிவராவ் மற்றொரு தீர்மானம் கொண்டு வந்தார். கவர்ன்மெண்டார் இதற்கு அதிகச்செலவு பிடிக்குமென்றும் இவர்களுக்குப் போதிக்க உபாத்தியாயர்கள் முன் வரவில்லையென்றும், சென்னை, பாளையங்கோட்டை முதலிய விடங்களிலுள்ள மிஷனரி பாடசாலைகளில் போய் படிக்கலாமென்றும் சொல்லித் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் யாரேனும் பரோபகாரிகள் இவர்களுக்குப் பாடசாலைகள் வைத்து நடத்தினால் அப்பாடசாலைகளுக்கு வேண்டிய கிராண்டுகள் கொடுத்து உதவி செய்வார்களென்று கவர்ன்மெண்ட் தரப்பில் பேசிய மிஸ்டர் டேவிட்ஸன் கூறினார். ஏதோ கர்மானுசாரமாகக் கஷ்டப்படும் செவிடு, குருடு, ஊமையர்களுக்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பரோபகாரிகள் முன் வருவார்களோ?

ஆந்திர மாகாணம்.

கடைசியாக ஆந்திர தேசத்துத் தலைவர்கள் ஆந்திர தேச ஜில்லாக்களை ஒரு தனி மாகாணமாகச் செய்ய வேண்டு மென்ற விஷயத்தில் கொண்ட கோரிக்கையை அநேகமாக நிறைவேற்றி விட்டார்கள் என்று சொலலலாம். ஆந்திர தேசம் ஒரு தனி மாகாணமாகச் செய்யப்பட வேண்டுமென்ற விஷயம் ஆலோசிக்கப்படும் காலத்தில் கவர்ன்மெண்டார் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கனம் வேங்கடபதி ராஜூ ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டது விசேஷமாகும். புதிய சீர்திருத்த சபை அமுலுக்கு வந்தவுடன் ஆந்திர தேசத் தலைவர்கள் விடாமல் கிளர்ச்சி செய்து ஆந்திர தேசத்தை ஒரு தனி மாகாணமாகச் செய்து கொண்டு விடுவரென்பது நிச்சயம். தமிழர்களை விட்டுத் தனியே பிரிந்து போக வேண்டுமென்று வெகுகாலம் ஆவல் கொண்டிருந்த ஆந்திரர்கள் இதைக் கேட்டுச் சந்தோஷப் படுவார்கள்.

சௌராஷ்டிர பிராமணர்கள்.

தமிழ் ஜில்லாககளிலுள்ள சௌராஷ்டிர பிராமணர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். காரணம் அவ்வகுப்பினர்கள் செய்த கிளர்ச்சியே யாகும். கவர்ன்மெண்டார் எலெக்ஷன் நிமித்தம் அவர்களைப் பிராமணரல்லாதார்களோடு சேர்த்தனர். பெரிய கிளர்ச்சியும கவர்னரை மதுரை வாசிகள் வரவேற்கமாட்டார்களென்ற சொல்லும் பிறந்தன. கவர்ன்மெண்டார் கடைசியாக சௌராஷ்டிர பிராமணர்களுடைய விருப்பத்துக்கு இணங்கியது பாராட்டத் தக்கது. இந்தச் சம்பவத்தினின்று ஒரு விஷயம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனங்கள் தங்களுடைய நியாயமான குறைகளை எடுத்துச் சொல்லி அவைகள் நீக்கப்படுவதற்குச் சரியாக மாத்திரம் கிளர்ச்சி செய்தால் கடைசியில் அவர்கள் வெற்றி பெறுவார்களென்பது நிச்சயம்.

ரெயில்வேக்களில் தங்குவதற்கு வசதிகள்.

இந்த மாகாணத்திலுள்ள ரெயில்வேககளில் மற்ற வகுப்பினர்கள் தங்குவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்திருந்தால் அதை போலவே இந்தியர்களுக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கனம் பி. வி. நரசிம்ம ஐயர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதைக் கவர்ன்மெண்டார் இதன் கருத்து மாறாமல் கொஞ்சம் திருத்தி ஒப்புக்கொண்டார். ரெயில்வேக்களில் நிறவித்தியாசம்பாராட்டப்படுவதால்அவ்வித்தியாசம்ஒழிவதற்கு இந்தத் தீர்மானம் கூடிய சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்படுவது அவசியமாகும். ரெயில்வே அதிகாரிகள் தீர்மானப்படி நிறைவேற்றுகிறார்களா வென்பதை அவ்வப்போது கனம் அங்கத்தினர்கள் கவர்ன்மெண்டாரை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

அடுத்த கூட்டம்.

செப்டம்பர் மாதத்தில் அடுத்த கூட்டம் கூடி எலிமெண்டரி கல்வி மசோதா, கிராமப் பஞ்சாயத்து மசோதா லோகல போர்ட்ஸ் மசோதா முதலியவைகள் சட்டமாகக்கப்படும். இந்த முறை கூடிய சட்டசபைக் கூட்டத்தில் கவர்ன்மெண்டார் ஜனங்களுடையவிருப்பத்திற்குக்கூடிய வரையில் இணங்கிப் பதில் சொல்லியது சந்தோஷமாயிருக்கிறது.

கனவான்களின்

உயர்ந்த லீவர் வாட்சுகள்,

இந்த கெடியாரத்தின் பின்புறமுள்ள மூடியின் பேரில் வெகு அழகாய் சித்திரவேலை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல உறுதியுள்ள சாமான்களால்நீடித்து உழைக்கக் கூடியனவாய் தயாரிக்கப்பட்டவை. ரூ. 4-8-0 ரேடியம் 8 மூலை ரிஸ்ட்லெட் வாட்சு விலை ரூபா 7-0-0, ரேடியம் ரவுண்டு வாட்சு விலை ரூபா 6-0-0, ரேடியம் இல்லாத சாதா வாட்சு விலை ரூபா 5-0-0.

தைரியலக்ஷ்மி & கம்பெனி,

தபாற்பெட்டி 265, மதராஸ்.

திலகர்பெருமான் ௨ம் பக்கம் தொடர்ச்சி.

பஞ்சாபினின்றும் சூரத்திற்கு அன்று வந்திறங்கிய லாலாலஜபதிராய் திலகர் மூலமாய் அங்குள்ள நிலைமையையறிந்துத் தாம் கோகலேயுடன் கூடிப்பேசி யொருசமாதானக் கமிட்டியேற்படுத்துவதாய்க் கூறிப்போயினர். மிதவாதத் தலைவர்களுடன் கலந்து யோசனை செய்வதற்காக ஒவ்வொருமாகாணத்தினின்றும் ஒரு தேசியப்பிரதிநிதியடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. ஆனால் லஜபதிசொன்னவேற்பாட்டைக்குறித்து எவ்வித சமாசாரமுந்தெரியவில்லை, ஆதலால் திலகர், கபர்தே, அரவிந்தர், மோதிலால் கோஷ் ஆகிய நால்வரும் மறுநாட்காலையில் சுரேந்திரநாத்பானர்ஜி தங்கியிருந்த விடத்திற்குச் சென்றனர். அவ்விடத்தில், காங்கிரஸின் பழயநிலை மாறுமெனவும், லாலாலஜபதிராயின் அருங்குணங்களைப்பற்றிப் பெருமையாகச்சிலவார்த்தைகள் காங்கிரஸ் அக்கிராசனரைத் தெரிந்தெடுக்கும் பொழுது சொல்லுவேமெனவும் மிதவாதிகள் வாக்களித்தால் அமிதவாதிகள் யாதொரு எதிர்ப்பையுங் கைக்கொள்ளாரென்று திலகர்பெருமான் பானர்ஜியிடம் கூறினர். ஜெபதியைக் குறித்துத்தாமே பேசுவதாகவும் வங்காளப் பிரதிநிதிகளால் பழயநிலை குலையாது தாம் பார்த்துக்கொள்ளுவதாகவும் பானர்ஜி திலகருக்குஉறுதிசொல்லிக் கோகலே மாலவியா அவர்களை நேரிற்கண்டு பேசும்படிக் கேட்டுக்கொண்டார் உடனே அங்கிருந்தபடியேஒரு தூதனையனுப்பி மாலவியைப் பானர்ஜியின் வீட்டுக்கு வரும்படி வேண்டியும் மாலவியா மறுத்துவிட்டனர். காங்கிரஸ் பந்தலில் எவ்வளவோ முறை திலகர் மாலவியாவைக் காணப்பிரயத்தனப்பட்டும் பயன்படவில்லை.

திருவனந்தபுரம் } ஆர். கணேசன்
21—8—20. }

இன்னும் வரும்.

நோட்டீஸ்.

தஞ்சாவூர் கோட்டை தெற்கலங்கம் தெருவில் காரைக்குடியிலிருந்து வந்து லேவாதேவி கடை வைத்திருக்கும், மெ. சு. பழனியப்ப செட்டியாகிய யென்னால் ஷை கடைக்கு பவர் யேஜண்டாக ஷை தஞ்சாவூர் கோட்டை வெளி கீழவாசல் பெரிய அரிசிகாரத் தெருவிலிருக்கும் அளகப்பிள்ளை குமாரர் சாம்பசிவம்பிள்ளைக்கு 10-12-19 தில் கொடுக்கப்பட்டிருந்த ஜெனால் யேஜண்டு பவர் ஆப் அட்டாணியை 12-8-20 தில், கியான்சல் செய்துவிட்டேன். ஷை 12-8-20 முதல் ஷை சாம்பசிவம்பிள்ளை யென்னுடைய பவர் ஏஜண்டு அல்ல. இது சங்கதியை இதன் மூலமாகசகலருக்கும் தெரிவிக்கலானேன். இதோடு ஷை சாம்பசிவம் பிள்ளைக்கு ஷை கடை நடவடிக்கை விஷயமாய் யென்னுடைய தம்பி மெ. சு. சுப்பிரமணியஞ்செட்டியால்10-12-19ல்கொடுக்கப்பட்டிருந்த ஜெனரல் யேஜண்டு பவர் ஆப் அடடாணியையும் 20-8-20 ல் கியான்சல் பண்ணி நிறுத்திவிட்டபடியால் ஷை 20-8-20 முதல் ஷை சுப்பிரமணியஞ் செட்டிக்கும் ஷை சாம்பசிவம் பிள்ளை யேஜண்டல்லவென்பதையும் இதன் முலம் சகலருக்கும் தெரிவிக்கலானேன்.

தஞ்சாவூர் } மெ. சு. பழனியப்ப
22—8—20. } செட்டி,

1,000 ரூபா இனம்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுச்கொண்டு வருகிறார்.

தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனாங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஐதராபாத், மதராஸ் முதலியஇடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிகாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டிபிகேட்டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியாலசெய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனம் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் ஏற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவரத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மதவிரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளி பஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதரம் வரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரிபவரும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டப்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைத் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்றைலால்.டில்லிவைத்தியர், சாலாமிசிரிமுறப்பா டிபோ, பெங்களூர் சிடி

"தாங்கள்"

நோயற்றவாழ்வுடன்

சுகஜீவியாய் ஜீவித்திருக்கவும் ஆயுள் விர்த்தியையும் சந்தான சந்ததிகளையும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்

தங்களுக்கு வேண்டுமானால் காலணா கார்டில் எங்களுக்கு எழுதினால் இனாமகவே அனுப்பி வைப்போம்.

ஹக்கீம்

எஸ். பி. எம். அப்துல்க்கனி ராவுத்தர்.

வலங்கமான், தஞ்சை ஜில்லா.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. மா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையைஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்.

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

மஹத்வமுள்ள மஹானால் கிடைத்த

"அருமையான மூலிகையும் தாயத்தும்"

குஷ்டம், க்ஷயம், மூலம், கிரஹணி, பிரமேகம், பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் நாள்பட்ட எந்த விதமான வியாதிகளும் பலவித கவலைகளும் கஷ்டங்களும உடனே நீங்கும். புத்திரபாக்கியம் உண்டாகும். வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து அனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபரமும் கிடைக்கும். எந்த தேசத்து (ஸ்டாம்பும்) அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,

மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

நேர்த்தியான பிரின்டிங்

ஜி. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்றாகவும் கிறமையாகவும் நடத்திவருகிறார். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப் டும்,முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிறார்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

தயாராய் விட்டது.

ஊருகாய் தினுசுகளும் சட்னிகளும் கை தேர்ந்த பிராமணர்களைக்கொண்டு செய்விக்சப் பட்டன.

கடுகுமாங்காய் 1 சேர் டின் விலை ரூ.	1	0	0
எலுமிச்சம்பழம் ,,	1	0	0
இஞ்சி ஊருகாய் ,,	0	10	0
கடாரங்காய் ,,	1	0	0
மாவடாம் 100-க்கு ,,	1	4	0
அசல் பாதம் அல்வா ,,	2	0	0
அப்பளம் 100-க்கு ,,	1	0	0
ரசம்பவுடர் ¼ படி டின்	1	0	0
சாம்பார்பவுடர் ¼ படி டின்	1	0	0
பருப்புப்பொடி ¼ படி டின்	1	0	0

3 ரூபாய்க்கு ஆர்டர் செய்கிறவர்கள் ஒரு ரூபா முன்பணம் அட்வான்ஸாக அனுப்பவும். பினங்கு சிங்கப்பூருக்கு ஏஜண்டுகள் தேவை.

THE INDIAN PICKLES CONDIMENT MANUFACTURING Co., Madras.

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப் பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனால் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.

விலை அணா 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

கனகாம்புஜம் 2-8-0.

	ரூ.	அ.		ரூ.	அ.
அம்புஜாக்ஷி	1	12	நாகரிகம்	2	0
விஜயசுந்தரம்	2	0	ஆனந்தமடம்	1	0
அஞ்சனாக்ஷி	2	4	தர்மாம்பாள்	1	2
பாலாமணி	2	0	வஜ்ரலேகை	0	12
அயாவ்ஷா	1	12	விஜயபாஸ்கரன்	1	0
ஞானாம்பிகை	1	8	ஜெயலக்ஷிமி	0	10
மேனகா	1	8	மாயாசுந்தரி	0	8
வஸந்தமல்லிகா	1	0	ஸீதாலக்ஷிமி	1	0
கோகிலாம்பாள்	0	12	சிவஞானம்	1	4
மங்கையர்க்கரசி	0	12			

எங்களிடம் எல்லாத் தமிழ் நாவல்களும், இன்னும் மற்ற புஸ்தகங்களும் கிடைக்கும். கேட்லாகுக்கு எழுதுங்கள்.

சாரி அண்டு கம்பெனி,
தபால் பெட்டி நெ. 281, மதராஸ்.

என்வனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.
,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்

சகலதேச வாஸிகளும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! நாணயமான சரக்குகள்!!

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலேபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் நெய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுககும் கேட்லாக் தருவிததுப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனாம்!

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.

உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்தலட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு எஃகுத் தகடுகளினால் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மைசூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிறார். ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்குக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, **Estd. 1906.**
தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.